For private circulation only

Book Post

# கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்

www.tchsportal.co.in

விலை : ரூ 60

திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்

ஜூலை 2020 • இதழ் 2



கர்த்தர் தமது ஜனத்திற்கு பெலன் கொடுப்பார். - சங். 29:11

# HEALTH OFFER

## Fitness Equipment

WORLD CLASS FITNESS EQUIPMENT

GERMAN TECH



*The Rock Treadmill*



*Orbitrack Ultra Without Seat*



*Home Gym*

Let's Play

## Gym & Play Equipment

WORLD CLASS GYM & PLAY PARK EQUIPMENT



*All in One Bench Press (Domestic)*



*Ab Core*




*Hack Squat With Leg Press*



*Machine*



*Elephant Slide*



*Double Swing*

**Mr.SOLOMON**

EXCEL

M : +91 98423 44469

W : www.excelfitindia.com, www.excelletsplay.com

CHENNAI - TRICHY - DINDIGUL - MADURAI - PASUMALAI - RAMNAD - RAJAPALAYAM - TENKASI - TIRUNELVELI - TUTICORIN - NAGERCOIL

TIRUNELVELI : 985/13, South Bye Pass Road, Opp. Passport Office, Tirunelveli - 627 005.

பதிப்பாசிரியர் : மன்னா செல்வகுமார்
ஆசிரியர் : ஜான் ஞானராஜ்
வடிவமைப்பு : சுஜித் ரெக்ஸ்

கௌரவ ஆசிரியர் குழு

பேராயர்.ஜோசப் மோகன் குமார்,மைக்கேல், ஐ.டி.கிங் பால், கிங்ஸ்லி மோசஸ் ஜேசுதாஸ், ஆல்வின் ஜேக்கப், அருள்திரு.ராஜசேகரன், பர்னபாஸ், ஜாபர்சன் ராஜசேகர், டேனியல் மோகன்ராஜ், ரமேஷ்

Tinnevelly Christian Historical Society
2-2-3(4), North Street,
Bungalow Surandai - 627859
Tenkasi District
Phone : 04633 290401
Mobile : +91 91767 80001, +91 75388 12218

TCHSPortal.co.in
christianhistorical@gmail.com

Facebook @christianhistorical

**தொடர்ந்து எங்கள் மாத இதழை வாங்க விரும்பினால்**

| சந்தா விபரம் | உள்நாடு |
|---|---|
| ஆண்டு சந்தா | 600 + நன்கொடை |
| ஐந்து வருட சந்தா | 3000 + நன்கொடை |
| தனிப்பிரதி | 60 + நன்கொடை |

உங்களுடைய முகவரி மற்றும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு எண்களையும் இணைத்து கொடுக்கப்பட்டுட்ட மின்னஞ்சல் அல்லது வாட்ஸ் ஆப் எண்ணிற்கு அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். உங்களுக்கு புத்தகங்களை அனுப்பி வைக்கப்படும்.

**சந்தாவை எங்கள் வங்கி கணக்கில் செலுத்த**

G Pay

Bank :- Federal Bank
Account name :- Tinnevelly Christian Historical Society
Account number :- 17480200003684
IFSC Code :- FDRL0001748

**திசை தெரியாமல் திகைக்காதிருக்க திருச்சபை வரலாறு தெரியவேண்டும்**

# உள்ளே

1.ஆசிரியரின் சுவடு

2.நெல்லைத் திருமண்டல இரு நூறாண்டு விழாவும் என் சிறு நினைவுகளும்

3.நம்ம ஊரு பண்டிகைகள்

4.மிஷன் பண்டிகை

5.யார் மிஷனரி ?

6.தேவையில்லையே!

7.ஜீலை மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

8.ஜீலை மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

9.நூறாண்டுகளுக்கு முன்பு கொண்டாடப்பட்ட சி.எம்.எஸ் சங்க நூற்றாண்டு விழா சுவாரசியங்கள்

10.கல்லறை திருநாள்

11.வளர்ந்தே பெருகுக என்றே என்ற பாடல் இயற்றிய ஆசிரியர் வரலாறு

12.சமரசம் செய்யாத சபை

13.ஸ்தோத்திர பண்டிகைகள் ஆரம்பமான வரலாறு

14.நம் ஜெபபுஸ்தகத்தை அறிந்து கொள்வோம்

15.திருநெல்வேலி திருமண்டலம் இருநூற்றாண்டு விழா (ஓர் பார்வை)

16.திருநெல்வேலியின் பாலர் மனமகிழ்ச்சி பண்டிகை தொடங்கிய வரலாறு

17.வரலாற்று செய்திகள்

# ஆசிரியரின் சுவடு



கிறிஸ்துவுக்குள் அன்பான இறைமக்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் அன்பின் நல்வாழ்த்துக்கள் மற்றும் வணக்கங்கள்

கடந்த ஜூன் மாதம் நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பில் மாதாந்திர ஆய்வு இதழான கிறிஸ்தவ வரலாற்றுச் சுவடுகள் வெளியிடப்பட்டது. அதன் முதல் பிரதியை கல்லிடைக்குறிச்சி சேகர குருவானவர் ஐயா அவர்கள் ஜெபித்து வெளியிட்டார்கள். திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்க பொறுப்பாளர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் 10 அம்ச செயல் திட்டங்களில் முக்கிய செயல் திட்டமான மாதாந்திர ஆய்விதழ் வெளியிடும் பணியில் ஆய்விதழின் பதிப்பாசிரியர் அன்பிற்குரிய தம்பி திரு.மன்னா செல்வகுமார் அவர்களும் ஆய்விதழின் வடிவமைப்பாளர் அன்புக்குரிய தம்பி குருத்துவ கல்லூரி மாணவர் சுஜித் ரெக்ஸ் அவர்களும் சிறப்பாக செயல்பட்டு குறித்த நேரத்தில் ஆய்விதழ் வெளிவரும் படி செய்தார்கள் அவர்களோடு இணைந்து நானும் இப்பணியைச் செய்திட ஆண்டவர் கிருபை செய்தார். ஆண்டவருக்கு மிகுந்த நன்றி செலுத்துகிறேன்.

குறிப்பிட்ட தலைப்பின் கீழ் நமது மாத இதழ்

ஒவ்வொரு மாதத்திலும் நம்முடைய சங்கத்தின் இந்த மாதாந்திர ஆய்விதழ் ஒரு குறிப்பிட்ட தலைப்பின் கீழ் வெளிவர திட்டமிட்டுள்ளோம் இந்த இரண்டாவது ஆய்விதழ் கிறிஸ்தவமும் விழாக்களும் என்ற தலைப்பின் கீழ் வெளிவருகிறது.

திருநெல்வேலி சி எம் எஸ் இருநூற்றாண்டு விழா மற்றும் கனம். ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வருகை தந்தின் இருநூற்றாண்டு விழா இந்த ஜூலை மாதம் நமக்கு மிக மிக முக்கியமான மாதம்

ஜூலை மாதம் ஏழாம் நாள் சி எம் எஸ் என்ற மகத்தான மிஷனரி சங்கத்தில் திருநெல்வேலி பணித்தளம் தொடங்கப்பட்டு 200 ஆண்டுகள் நிறைவடையும் நாள் மட்டுமல்லாது திருநெல்வேலிக்கு என ஆண்டவரால் முன் குறித்து தெரிந்தெடுக்கப்பட்ட பாத்திரமான நெல்லை அப்போஸ்தலர் என புகழ்ந்து உரைக்கப்படும் மகோன்னத மிஷனரி அருள்திரு கனம் C.T.E. ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வருகைதந்து 200 ஆண்டுகள் நிறைவடையும் பொன் நாள் ஆகும்.(07.07.1820 - 07.07.2020) இது நம் அனைவருக்கும் கிறிஸ்துவின் நற்செய்தியை பறைசாற்றிய மிஷனரியின் ஜூபிலி விழா.

04.11.1790 இல் மேற்குப் பிரஷ்ய (ஜெர்மனி) நாட்டில் க்ரோட்டன்ஸ்கோட்டையில் பிறந்து மேரியன்வெர்டரில் வளர்ந்து இந்திய நாட்டிற்கு சி எம் எஸ் மிஷனரியாக சென்னைக்கு 1814 இல் வந்த ரேனியஸ் ஐயரவர்கள் ஆறு மாதங்கள் தரங்கம்பாடியில் செம்மொழியாம் தமிழ் மொழியை சிறப்பாக கற்று தேர்ந்து 1815 முதல் சென்னையில் ஊழியத்தை தொடங்கினார்கள். வடதமிழகத்தில் சென்னை மற்றும் ஆற்காடு வட்டாரங்களில் மிகச்சிறப்பாக ஆண்டவருடைய ஊழியத்தை செய்து வந்த போது ஊழியம் நன்கு வளர்ச்சிபெற்ற சூழ்நிலையில் அப்போதைய சென்னை சி.எம்.எஸ் கமிட்டியினரின் காழ்ப்புணர்ச்சியினால் "புதிதாக தொடங்கப்பட உள்ள சி.எம்.எஸ் பணித் தளத்திற்கு செல்லுங்கள்" என்ற அடிப்படையில் திருநெல்வேலிக்கு மாற்றப்பட்டார்.

திருநெல்வேலிக்கான பணிமாற்றம் தொடக்கத்தில் அருள்திரு கனம் ரேனியஸ் ஐயரவர்களுக்கு மிகுந்த மனக் கஷ்டத்தை கொடுத்தது ஆனாலும் காத்திருந்து ஜெபித்த பொழுது அதை கர்த்தருடைய சித்தமாக ஏற்றுக்கொண்டு ரேனியஸ் திருநெல்வேலி நோக்கி புறப்பட்டார். 1820 ஜூலை ஏழாம் நாள் திருநெல்வேலி வந்து சேர்ந்தார். ரேனியஸ் ஐயர் அவர்களின் வருகையினால் சுமார் 400 இடங்களில் திருச்சபைகள் நிறுவப்பட்டன சுமார் 150 பள்ளிக்கூடங்கள் நிறுவப்பட்டன. திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சியின் அடித்தளம் ரேனியஸ் ஐயரவர்கள் என்றால் மிகையாகாது. ரேனியஸ் ஐயரவர்கள் தொடங்கிய கல்விப்பணி, மருத்துவ பணி, சாதி பேதமற்ற சமூகப்பணி, அனைத்து சாதியை சேர்ந்தவர்களும் ஆசிரியர்களாக உபதேசிமார்களாகப் படிப்பதற்கு செமினரியில் முழு வாய்ப்பு, ஊழியத்தில் பல்வேறு சிறப்பு செயல்திட்டங்கள், கிறிஸ்தவ மிஷன் கிராமங்கள் உருவாக்கம், தமிழில் வேதாகம மொழிபெயர்ப்பு பணி, தமிழில் நற்செய்தி பிரசுரங்கள் Tracts வெளியீடு என சொல்லிக்கொண்டே போகலாம்

திருநெல்வேலிக்கு வந்த ஐரோப்பிய மிஷனரிகளில் கோடைகாலங்களில் ஊழிய இருப்பிடத்தை விட்டு கோடை வாசஸ்தலங்களுக்குச் செல்லாமல் கோடை காலத்திலும் இடைவிடா நற்செய்திப் பணியை செய்த ஒரே மிஷனரி ரேனியஸ் ஐயர் அவர்களாவார்.

ரேனியஸ் ஐயரவர்களின் திருநெல்வேலி வருகைக்கான இருநூற்றாண்டு விழா & திருநெல்வேலி சி.எம்.எஸ் இரு நூற்றாண்டு விழா ஆகிய விழாக்கள் நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக ஒரு ஆண்டு முழுவதும் மிகச் சிறப்பாக கொண்டாடுவது என்றும் ரேனியஸ் ஐயரவர்களை அவரது பணிகளை தமிழகமெங்கும் கொண்டு செல்வது என ஜெபத்தோடு திட்டமிடுகிறோம்.

ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வருகைதந்த 07.07.2020 அன்று ரேனியஸ் ஐயர் அவர்களின் கல்லறை அமைந்துள்ள நினைவிடத்தில் மரியாதை செலுத்தி விழா எடுப்பது என்றும் ரேனியஸ் ஐயரவர்கள் திருநெல்வேலிக்கு வருகைதந்ததின் இருநூற்றாண்டு விழா நினைவாக நூல்கள் வெளியிடுவது என பல்வேறு செயல்திட்டங்களை செயல்படுத்த ஜெபத்தோடு திட்டமிடுகிறோம் வாசகர்களாகிய நீங்களும் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்து இந்த நிகழ்ச்சிகள் சிறப்படைய உதவி செய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

### முற்பிதாக்களின் கால விழாக்கள்

வேதாகமத்தில் முற்பிதாக்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு ஆகிய மூவரும் ஆண்டவராகிய கடவுள் தங்களுக்கு திருக்காட்சி, தரிசனம் தந்த இடங்களுக்குத் தங்களது குடும்பத்தினரை எல்லாம் அழைத்துக்கொண்டு அங்கு சென்று பலி செலுத்தி ஆண்டவருக்கு நன்றி செலுத்தி விழா எடுத்த சம்பவங்களை வேதாகம தொடக்கத்தில் காண்கிறோம்.

### இஸ்ரவேலரின் வனாந்திர பயண காலத்தில் விழாக்கள்

எகிப்தின் சிறையிருப்பு வாழ்விலிருந்து இறை மக்களாகிய இஸ்ரவேலரை ஆண்டவர் புறப்படச் செய்த பொழுது ஆண்டவருக்கு நன்றி செலுத்தும் வண்ணமாக ஆண்டவர் செய்த நன்மையை நினைவுகூறும்படி பஸ்கா பெருவிழா என்னும் பண்டிகையை கொண்டாடியதை நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களின் வனாந்தர பயண வேளையில் அறுப்பின் பண்டிகை சேர்ப்பின் பண்டிகை கூடாரப் பண்டிகை போன்ற பெருவிழாக்களைக் கொண்டாடும்படி யாவே கடவுள்மோசேயோடுபேசிகட்டளையிடுவதை பார்க்கிறோம். இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்திய சிறையிருப்பிலிருந்து புறப்பட்ட ஐம்பதாம் நாள் அன்று வனாந்தரத்தில் யாவே கடவுளோடு உடன்படிக்கை செய்தார்கள் அந்த ஐம்பதாம் நாள் பண்டிகை பெந்தெகோஸ்தே பண்டிகையாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. புதிய ஏற்பாட்டிலும் இப்பண்டிகை கொண்டாடப்பட்ட சம்பவங்களை பார்க்கிறோம்.



### யூத சமயத்தில் விழாக்கள்

கிறிஸ்தவ சமயத்தின் முன்னோடி சமயமான யூத சமயத்தில் விழாக்கள் முக்கிய பங்கு வகிப்பதை வேதாகமத்தில் பழைய ஏற்பாடு மூலம் நாம் உணர்ந்து கொள்கிறோம் அறுப்பின் பண்டிகை சேர்ப்பின் பண்டிகை கூடாரப் பண்டிகை பெந்தேகோஸ்தே பண்டிகை போன்ற பண்டிகைகள் உடன் பழைய ஏற்பாட்டின் பிற்காலத்தில் பூரிம் பண்டிகை என்றொரு பண்டிகையும் எஸ்தர் காலமுதல் கொண்டாடப்பட்டது அதன் பின்னர் கிரேக்க அரசரால் எருசலேம் தேவாலயம் தீட்டாக்கப்பட்ட போது கிரேக்கர்களைப் போரில் தோற்கடித்த மக்கபேயர் காலத்தில் அவர்களால் எருசலேம் தேவாலயம் தூய்மை படுத்தப்பட்டது அந்தக்காலம் முதல் ஆண்டுதோறும் தேவாலய பிரதிஷ்டை பண்டிகை கொண்டாடப்பட்டது.

### புதிய ஏற்பாட்டு கால விழாக்கள்

புதிய ஏற்பாட்டு காலத்திலும் பஸ்கா பெருவிழா கூடார பெருவிழா தேவாலய பிரதிஷ்டை பெருவிழா போன்ற பண்டிகைகள் கொண்டாடப்பட்ட சம்பவங்களை நாம் பார்க்கிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மறுரூப காட்சி அளித்த சமயத்தில் கூடாரப் பண்டிகை நடைபெற்று வந்ததாகவும் ஆதலால்தான் தனித்தனி கூடாரங்கள் அமைப்போம் என பேதுரு கூறியதாகவும் வேதாகம ஆய்வாளர்கள் கருதுகின்றனர். “எருசலேமிலே தேவாலய பிரதிஷ்டை பண்டிகை வந்தது” என்ற வசனத்தை நற்செய்தி நூல்களில் நாம் பார்க்க முடிகிறது.

### தமிழர்களும் விழாக்களும்

விழாக்களை முன்னின்று நடத்துவதிலும், விழாக்களை காண்பதிலும், தமிழர்கள் நிபுணர்கள் ஆக இருந்தனர். பழந்தமிழர் இந்திர விழா, சித்ரா பவுர்ணமி விழா, பொங்கல் விழா, போன்றவற்றை மிகச்சிறப்பாக நடத்தியதை பழந்தமிழ் இலக்கியங்கள் மூலம் அறியமுடிகிறது.

### கிறிஸ்தவத்திற்குள் விழாக்கள்

விழாக்கள் மக்களை அதிகம் ஈர்க்கின்றது என்ற உண்மையை மிகத்தெளிவாக கண்டறிந்தவர் கிறிஸ்தவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய இயேசு சபை போதகர்.வீரமாமுனிவர் ஆவார். கத்தோலிக்க கிறிஸ்தவத்தில் விழாக்களுக்கு சிறப்பிடத்தை அளித்தவர் இவரே. சிறப்பாக நடத்தப்படும் விழாக்கள் மூலம் அதை பார்க்கின்ற பிற மதத்தினர் கிறிஸ்துவை ஏற்றுக் கொள்கின்றனர் கிறிஸ்தவராகின்றனர் என்பதையும் கண்டறிந்தவர் இவரே. தமிழகம் முழுவதும் பணி செய்த அவரால் தமிழ் கலாச்சாரம் சார்ந்து கிறிஸ்தவ விழாக்கள் கொண்டாடப்பட்டன. இன்றளவும் அவை தொடருகின்றன. ஆதலால் கத்தோலிக்க கிறிஸ்தவ சபை பிற மதத்தினரை வெகு எளிதில் ஈர்த்து விடுகிறது.

### பிற சமயங்களில் விழாக்கள்

#### இந்து சமயம்

கிறிஸ்தவர் அல்லாத பிற சமயத்தினரில் இந்துக்கள் ஆண்டுதோறும் ஏராளமான விழாக்களை கொண்டாடி வருகின்றனர் இந்து பண்டிகைகள் மட்டுமல்லாது ஊர் தெய்வம், குலதெய்வம், காவல் தெய்வம், ஆகியவற்றுக்கு ஆண்டுதோறும் கொடை விழாக்கள் எனும் திருவிழாக்களை நடத்தி வருகின்றனர். அந்நேரத்தில் அலங்காரப் பந்தல் அமைக்கப்படுகிறது அந்த இடத்தில் ஓரிரு நாட்கள் தங்கி இறைவழிபாடு செய்து

வருகின்றனர்.

### இஸ்லாம் சமயம்

இஸ்லாமிய சமயத்தினரும் இஸ்லாமிய பண்டிகைகள் மட்டுமில்லாது இஸ்லாம் சமயத்தை பரப்ப வந்த மகான்களின் அடக்கஸ்தலம் உள்ள இடத்தில் கந்தூரி விழா எனும் சந்தனக்கூடு திருவிழா நடத்தி வருகின்றனர். அலங்கரிக்கப்பட்டயானையின் மேல் சந்தனக்கூடு கொண்டுவரப்பட்டு அதிலுள்ள சந்தனம் மகான்களின் கல்லறை மீது பூசப்படுகிறது. இந்த விழாக்களில் பள்ளிவாசல் , தர்காக்கள் முன்பு அலங்கார பந்தலிட்டு அங்கு ஓரிரு நாள் தங்கி இருந்து இறைவழிபாடு செய்து வருகின்றனர்.

### தென்னிந்திய திருச்சபை CSI கிறிஸ்தவத்தில் விழாக்கள்

தமிழ்நாட்டில் தென்னிந்திய திருச்சபையில் எட்டு திருமண்டலங்கள் உள்ளன நான்கு திருமண்டலங்கள் வட தமிழகத்திலும் நான்கு திருமண்டலங்கள் தென் தமிழகத்திலும் உள்ளது. அவற்றில் கொண்டாடப்படும் முக்கிய விழாக்கள்

### 1.ஸ்தோத்திர பண்டிகை எனப்படும் அறுப்பின் பண்டிகை,

சேர்ப்பின் விழா எனப்படும் சேர்ப்பின் பண்டிகை தமிழகமெங்கும் சி.எஸ்.ஐ திருச்சபைகளில் கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை பெரும்பாலான இடங்களில் வெள்ளி சனி ஞாயிறு நாட்களும், ஒரு சில இடங்களில் செவ்வாய் புதன் வியாழன் நாட்களும் நடைபெறுகிறது. இப்பண்டிகை அலங்கார பந்தலில் வைத்து நடத்தப்படுகிறது. வடதமிழகத்தில் பல இடங்களில் இப்பண்டிகை பெரும்பாலும் ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் மட்டும் நடத்தப்படுகிறது.

வேலூர் திருமண்டலத்தில் முட்டத்தூர் மற்றும் பொண்ணை ஆகிய இடங்களில் மூன்று நாள் பண்டிகையாக இது நடைபெறுகிறது

நாலந்தூர், ஞானோதயம் ஆகிய இடங்களில் சேர்ப்பின் விழா என ஒரு நாள் இப்பண்டிகை நடத்தப்படுகிறது திருமண்டல தலைமையிடமான வேலூரில் தூது பணி விழா மற்றும் சேர்ப்பின் விழா என்ற பெயரில்விழா நடைபெறுகிறது. திருச்சி-தஞ்சாவூர் திருமண்டலத்தில் ஞாயிறு ஒரு நாள் மட்டும் இப்பண்டிகை நடத்தப்படுகிறது. சில இடங்களில் ஓரிரு நாட்கள் நடத்தப்படுகிறது.

**2.தேவாலய பிரதிஷ்டை நாள்,** சபை உருவான நாள் அதை அடிப்படையாகக் கொண்டு ஆண்டுதோறும் நடைபெறுகிற தேவாலய பிரதிஷ்டை பண்டிகை , சபை நாள் பண்டிகை தமிழகமெங்கும் தென்னிந்திய திருச்சபையில் காணப்படுகிறது. இப் பண்டிகையை ஒட்டி அசன விருந்து நடைபெறுகிறது.

3. கன்னியாகுமரி திருமண்டலத்தில் **குடும்ப நாள் விழா** எனும் ஒரு பண்டிகை கொண்டாடப்படுகிறது. திருச்சி - தஞ்சாவூர் திருமண்டலத்தில் இப்பண்டிகை குடும்பப் பண்டிகை என அழைக்கப்படுகிறது இப்பண்டிகை இந்த திருமண்டலங்களில் ஞாயிறு அன்றே நடைபெறுகிறது.

### தென்தமிழக சி.எஸ்.ஐ திருச்சபைகளின் முக்கிய விழாக்கள்



திருநெல்வேலி திருமண்டலத்தில் ஸ்தோத்திர பண்டிகை எனும் கூட்டப் பண்டிகையும் தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்தில் தேவாலய பிரதிஷ்டை பண்டிகை எனும் அசனப் பண்டிகையும் முக்கியத்துவம் பெறுகிறது.

### தேவாலயப் பிரதிஷ்டை பண்டிகை எனும் அசன பண்டிகை

தேவாலய பிரதிஷ்டை பண்டிகை எனும் அசன பண்டிகை கொண்டாடும் வழக்கம் கிழக்கு திருநெல்வேலியிலிருந்து மேற்கு திருநெல்வேலி நோக்கி பயணித்து வேகமாகப் படிப்படியாக பரவிவருகிறது திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தினர் அரசு பணி, தொழில்,வணிகம் காரணமாக தமிழகமெங்கும் பரவலாக வசிப்பதால் அவர்கள் மூலமாக இப்பண்டிகை தமிழ்நாடெங்கும் கொண்டாடுகிற பண்டிகையாக மாறிவிட்டது இப்பண்டிகை நாட்களில் தமிழ்நாட்டில் எங்கு இருந்தாலும் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு வந்து இப்பண்டிகையில் பங்கேற்பதை பேராசீர்வாதமாக சபைமக்கள் எண்ணுகிறார்கள்.

அசன உணவு ஏழை எளியவர்களுக்கு பரிமாறப்படுவதோடு மட்டுமல்லாமல் குடும்ப உறவினர்களுக்காக வெளியூர்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது தங்களது சொந்த ஊர்களிலிருந்து சென்னை, கோயம்புத்தூர், பெங்களூர், மும்பை, போன்ற பல பட்டனங்களில் வசிப்பவர்களுக்கும் உடனடியாக பார்சல் மூலமாக அசன உணவு அனுப்பப்படுவதை கண்கூடாக பார்க்க முடிகிறது. தங்களது சொந்த ஊர் தேவாலயத்திலிருந்து உறவினர்கள் மூலம் தங்களுக்கு அனுப்பப்படுகிற அசன உணவை சாப்பிடுவதை ஆசீர்வாதமாக இறைமக்கள் கருதுகின்றனர்.

(ஸ்தோத்திர பண்டிகை எனும் கூட்டப் பண்டிகை குறித்து இந்த இதழில் தனிஆய்வுக் கட்டுரையில் முழுமையாக விளக்கப்பட்டுள்ளது)

### பிற கிறிஸ்தவ சமயப் பிரிவுகளில் விழாக்கள்

### கத்தோலிக்க கிறிஸ்தவம்

கத்தோலிக்க கிறிஸ்தவம் விழாக்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகிறது கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயம் எந்த புனிதர் பெயரால் அழைக்கப்படுகிறதோ அந்தப் புனிதர்களின் நினைவு நாட்களான திருநாட்களை மையப்படுத்தி அதையொட்டி கொடியேற்றம் அதன்பின்பு ஒன்பது நாட்கள் நவநாள் ஜெபம் என பத்து நாட்கள் திருவிழாவாக கொண்டாடி வருகின்றனர் பத்துநாட்கள் நிறைவில் கொடியிறக்கம் நிகழ்ச்சியுடன் விழா நிறைவடைகிறது எந்த ஊரில் வாழ்ந்து வந்தாலும் தங்களது ஆலய திருவிழா நடைபெறும் இந்த நாட்களில் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தவறாது பங்கெடுக்கிறார்கள் பத்து நாட்களும் திருவிருந்து ஆராதனை கலைநிகழ்ச்சிகள் என விமரிசையாக விழா நடைபெறுகிறது.

இந்த நாட்களில் தற்பொழுது பல இடங்களில் அசன வைபவம் நடைபெறுகிறது. கத்தோலிக்க கிறிஸ்தவ பேராயர் முக்கிய பண்டிகை நாளில் பங்கு எடுக்கிறார் இத்திருவிழா நாட்களில் புது நன்மை வழங்கும் வைபவமும் (திடப்படுத்தல்) நடைபெறுகிறது இதற்காக சபையில் தலைக்கட்டு வரி போடப்படுகிறது.

### லூத்தரன் கிறிஸ்தவம்

உலக அளவில் பல்வேறு பிரிவுகள் இருந்தாலும் தமிழக அளவில் TELC,ALC , IELC என மூன்று லூத்தரன் பிரிவுகள் உள்ளன. அனைத்து லூத்தரன் பிரிவு சபைகளிலும் அறுப்பின் பண்டிகை எனப்படும் ஸ்தோத்திர பண்டிகை ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது அந்த பண்டிகை நாட்களில் படைக்கப்படும் காணிக்கை பொருட்கள் ஏலம் விடப்படுகின்றன அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது.

**பெந்தேகோஸ்தே கிறிஸ்தவம்**

பெந்தேகோஸ்தே சபைகளில் ஆண்டுதோறும் நடைபெறுகிற சிறப்பு கன்வென்ஷன் கூட்டங்கள் விழாக்கள் ஆக நடைபெறுகிறது சில குறிப்பிட்ட பெந்தெகோஸ்தே பிரிவுகளில் தமிழ்நாடு அளவில் மூன்று முதல் ஐந்து நாட்கள் வரை ஓரிடத்தில் ஆண்டு கன்வென்ஷன் கூட்டங்கள் State, Centre, Region அளவில் நடைபெறுகிறது அந்த இடத்தில் தமிழ்நாடு முழுவதிலும் இருந்து வருகிற சபை மக்கள் தங்கியிருந்து இறை வழிபாடு செய்கிறார்கள் இந்த நாட்களில் சபை சார்பில் மூன்று வேளை உணவும் சிறப்பாக வழங்கப்படுகிறது.

**படைக்கும் காணிக்கைகளை தலைப்பாகக் கொண்ட விழாக்கள்**

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் முக்கியமான சிறப்பு உணவு விவிக்கா, இட்லி மாவில் கருப்பட்டி அல்லது சர்க்கரை கலவை மற்றும் பதநீர் சேர்க்கப்பட்டு முந்திரிப் பருப்பு போன்றவை போடப்பட்டு இட்லி தட்டுகளில் இட்லி போன்று வைத்து அவித்து எடுக்கப்படும் முக்கியமான உணவு இது. இதை சுவிசேஷ வாரத்தின் நிறைவு நாளான சுவிசேஷஞாயிறு அன்று ஒவ்வொருவரும் வீட்டிலிருந்து விவிக்கா செய்து தேவாலயத்திற்கு கொண்டுசென்று அங்கிருந்து சுவிசேஷ ஊழியம் செய்கின்ற கிராமங்களுக்கு கொண்டு சென்று அங்குள்ள மக்களுக்கு இதை வினியோகித்து தங்களுடைய அன்பை பகிர்ந்து கொள்கிறார்கள். அந்த பண்டிகை விவிக்கா பண்டிகை எனப்படுகிறது. அதேபோன்று திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் பனை மரங்கள் அதிகம் பனை சார்பு பொருட்களும் அதிகம். பனங்கொட்டைகளை மண்ணில் புதைத்து தண்ணீர் ஊற்றி பராமரிப்பதன் மூலம் கிடைக்கும் முக்கியமான ஒரு உணவுப்பொருள் பனங்கிழங்கு ஆகும். பனங்கிழங்கு படைக்கும் பண்டிகை கிழங்கு பண்டிகை எனப்படுகிறது. உளுந்து படைக்கும் பண்டிகை உளுந்து பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. கோழியை காணிக்கையாகப் படைக்கும் பண்டிகை கோழிப் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் கல்குளம் மற்றும் விளவங்கோடு தாலுகாக்களில் ரப்பர் அதிகமாக கிடைக்கக்கூடிய ஒரு பொருள் ஆகும். ரப்பர் ஷீட்டுகளை படைக்கும் பண்டிகை ஒன்று அங்கு நடைபெறுகிறது அந்த பண்டிகை ரப்பர் ஷீட் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.

**நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் 10 அம்ச செயல் திட்டம் (Soft Reminder)**

நமது சங்கத்தின் இரண்டாவது மாத இதழ் வாயிலாக 10 அம்ச செயல் திட்டத்தை சுருக்கமாக நினைவுபடுத்துவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்

1.திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் மாதாந்திர இதழாக கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள் எனும் ஆய்வு இதழ்

2.பழமைவாய்ந்த கிறிஸ்தவ வரலாற்று நூல்களை சேகரிப்பது

3.பழமைவாய்ந்த கிறிஸ்தவ வரலாற்று நூல்களை Scan செய்தும் Digitalize செய்தும் பாதுகாப்பது

4.வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மறுபதிப்பு வெளியிடப்படாத கிறிஸ்தவ மிஷனரிகளின் வாழ்க்கை வரலாறுகளை மறுபதிப்பு செய்வது

5.திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்திற்கு என ஆண்டு உறுப்பினர்கள், ஆயுட்கால உறுப்பினர்கள், ஆவணங்களை பார்வையிடும் உறுப்பினர்கள் சேர்ப்பது.

6.இதுவரை வெளிவராத முக்கியமான மிஷனரிகளின் வாழ்க்கை வரலாற்று ஆவணப்படங்களை வெளியிடுவது.

7.மிஷனரிகள் வாழ்ந்த இடங்களையும், மிஷனரிகளுடைய கல்லறைகள், இரத்த சாட்சிகளின் வாழ்விடங்களைப் பார்க்க விரும்புகிறவர்களின் வசதிக்காக நிஷ்வி-விஷ்லிஜ மிலிற்ஷஷ்விமி துழிஸ்ரீ சிறப்பாக அமைப்பது

8.மிஷனரிகளை நினைவுபடுத்துகிற மிஷனரிகளின் கல்லறைகளை பராமரிப்பது.

9.திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பில் ஆய்வு நூலகம் அமைப்பது.

10. திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பாக வரலாற்று ஆய்வுக் கருத்தரங்கம் மற்றும் வரலாற்று கள ஆய்வு பயிற்சி நடத்துவது.

**விழாக்களின் பயன்**

1.விழாக்கள் கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுகளை புதுப்பிக்கின்றன

2.விழாக்கள் மனிதர்களுக்குள் உறவுகளை வலுப்படுத்துகின்றன.

3.விழாக்கள் மனிதர்களை தங்களது முன்னோர்களின் பூர்வகால வாழ்விடங்களுக்கு கொண்டு செல்கின்றன.

4.விழாக்கள் மனிதர்களுக்குள் கூட்டு வழிபாட்டை உருவாக்குகின்றன.

5.விழாக்கள் மனிதர்களை கடவுளின் திருச்சமுகத்திற்கு நேராக கொண்டு செல்கின்றன.

6.விழாக்கள் மனிதர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கின்றன.

7.விழாக்கள் மனிதர்களுக்குள் புரிந்து கொள்ளுதலைக் கொடுக்கின்றன.

**ஜூலை மாதத்து நிகழ்வுகளின் நினைவுகூரல்**

இம்மாதத்தில் பிறந்தநாட்கள் மற்றும் நினைவு நாட்கள் மூலமாக நினைவுகூரப்படும் இறை அருட்பனியாளர்கள் குறித்த பட்டியல் நமது மாதாந்திர ஆய்விதழில் மிக அருமையாக பட்டியலிடப்பட்டுள்ளது அதிலுள்ள ஒருசிலரைக் குறித்து முக்கிய சம்பவங்களை நினைவு கூற விரும்புகிறேன்.

1.இடைக்கால திருநெல்வேலி திருமண்டலத்தில் இரும்புத் தூணாக செயல்பட்டவர் கார் மிஷனரி என்றழைக்கப்படும் அருள்திரு. எட்மண்ட் ஸ்டைல்மேன் கார் ஐயரவர்கள்.

அவர் 06.07.1964 இல் பிறந்தவர் 1887 இல் மிஷனரியாக திருநெல்வேலிக்கு வந்தவர். நல்ல தமிழ்ப் புலமையை வளர்த்துக் கொண்டவர். மிக அருமையாக அருளுரை ஆற்றக்கூடியவர். இரக்கசுபாவம்கொண்டவர். திருச்சபை மக்களோடு அன்போடு பழகுவதில் அவருக்கு நிகர் எவரும் இல்லை. சிங்கம்பட்டி ஜமீன்தார் தம் ஜமீன் எல்லைக்குள் கிறிஸ்தவ தேவாலயமும் கிறிஸ்தவ பள்ளிக்கூடமும் வரக்கூடாது என்ற வைராக்கியத்தோடு இருந்தார். அந்த ஜமீன்தாரின் மனதை

மாற்றியவர் கார் மிஷனரி ஆவார். அந்த ஜமீன்தாரே ஜமீன் எல்லைக்குட்பட்ட தெற்கு பாப்பாங்குளம் கிராமத்தில் கிறிஸ்தவ தேவாலய மேற்கூரை அமைக்கும் பணிக்கு அனைத்து பொருளுதவியும் தரும் அளவிற்கு தூண்டுதலாக அவர் செயல்பட்டார். மிக உயரிய பதவியில் இருந்த அவர் இதற்காக கல்லிடைக்குறிச்சியில் இருந்து தெற்கு பாப்பாங்குளத்திற்கு சென்று பின் தெற்கு பாப்பான் குளத்தில் இருந்து ஜமீன்தார் வசித்த ஜமீன் சிங்கம்பட்டி க்கு நடந்து சென்றார் எனக் கூறப்படுகிறது கல்லிடைக்குறிச்சி திருச்சபையின் தந்தை என இவர் புகழப்படுகிறார். 1890 முதல் 1897 வரை அருள்திரு.உவாக்கர் ஐயரவர்கள். சி.எம்.எஸ் தலைமை மிஷனரியாக மற்றும் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவராக செயலாற்றிய பொழுது அவருக்கு பேருதவியாக இருந்து மாவட்ட சர்ச் கவுன்சில் துணைத் தலைவராக சிறப்பாக கார் மிஷனரி பணியாற்றினார். தலைவர் பதவியிலிருந்து உவாக்கர் ஐயரவர்கள் விலகிய பின்னர் மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவராகவும் மற்றும் சி.எம்.எஸ் தலைமை மிஷனரி ஆகவும் 1897 முதல் 1915 வரை மிக அருமையாக கார் செயலாற்றினார். கார் மிஷினரி அவர்களது காலத்தில் தான் திருநெல்வேலி திருமண்டலத்தில் பெரும்பாலான தேவாலயங்களுக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் சொந்தமாக நிலங்கள் வாங்கப்பட்டது. திருநெல்வேலி திருமண்டல சொத்து பதிவேடான CMS Tinnevelli Documents Register இதற்கு சான்றாக உள்ளது. இவரது முயற்சியால் புதிய தேவாலயங்கள் கட்டப்பட்டன. அனேக தேவாலயங்கள், பள்ளிக்கூடங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டன. இவரது காலத்தில் அனேக தேவாலயங்களுக்கு அடிக்கல் நாட்டுகிற பாக்கியம் இவருக்கு கிடைத்தது. கார் மிஷனரி அவர்களது பிறந்த நாள் ஜூலை 6

2. 1924 இல் திருநெல்வேலியில் சி.எம்.எஸ், எஸ்.பி.ஜி மிஷன்கள் ஒரே நிர்வாகத்திற்குள் கொண்டுவரப்பட்டபோது சி.எம்.எஸ், மிஷனின் அடிப்படை சத்தியமான “ சடங்காச்சாரங்கள் அற்ற சுத்தாங்க சுவிசேஷம்” க்கு பங்கம் நேரிடலாம் என சி எம் எஸ் தரப்பினர் அஞ்சினர் ஆதலால் அதை வலிமையாக எதிர்த்தனர் அவ்வாறு எதிர்த்த முக்கியமான சபைகளில் மருதகுளம்சபை ஒன்று. அந்த சபை மக்களை அமைதிப்படுத்த பேராயர் நார்மன் ஹென்றி டப்ஸ் அவர்கள் முயற்சி மேற்கொண்டதோடு மருத குளத்திற்கு நேரில் சென்றார் அவரோடு மாவட்ட கலெக்டர் அவர்களும் சென்றார்கள் மருதகுளம் கிராமத்தார் அவரை அவமானப்படுத்தி திருப்பி அனுப்பினார்கள் அந்த வேளையில் உடன்சென்ற மாவட்ட கலெக்டர் பேராயர் அவர்களிடம் ஐயா இந்த கிராமத்தார் மீது முறைப்படி புகார் கொடுங்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் அனைவரையும் கைது செய்கிறோம் என தெரிவித்தார் ஆனால் கிறிஸ்தவ இரக்கத்தை வெளிப்படுத்திய பேராயர் டப்ஸ் அவர்கள் எதிர்ப்பு கொடுப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது நான் புகார் மனு தர மாட்டேன் என உறுதியாக மறுத்து விட்டார் இவ்வாறு நடந்துகொண்ட பேராயர்.அருட்பெருந்திரு. நார்மன் ஹென்றி டப்ஸ் அவர்களது பிறந்தநாள் ஜூலை 5

3. திருநெல்வேலி திருமண்டலத்தில் முக்கியமான பேராயர்களில் ஒருவர் அருட்பெருந்திரு.ஸ்டீபன் நீல் அவர்கள்.அவர் builders of the Indian Church ,Towards Church union போன்ற பல்வேறு வரலாற்று நூல்களை எழுதியுள்ளார். ஜோன்ஸ் ஃபண்ட் சுவிசேஷ ஊழியர்கள், சுவிசேஷ உபதேசிமார் என நற்செய்திக் குழு திருநெல்வேலி திருமண்டலத்தில் செயலாற்றிய போது அதை அவர் ஒழுங்குபடுத்தி Diocesan Evangelistic Ban என்ற சுவிசேஷ அமைப்பாக அதை மாற்றினார். 1980 ஜூலை மாதம் நடைபெற்ற திருநெல்வேலி திருமண்டலத்தின் இருநூற்றாண்டு நிறைவு விழாவில் பங்குபெற்ற ஒரே முன்னாள் பேராயர் மகாகனம் ஸ்டீபன் நீல் அவர்களே ஆவார். அப்போதைய நெல்லை பேராயர் மகாகனம் சா தானியேல் ஆபிரகாம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் 500 பருவம் கடந்தவர்களுக்கு பாளையங்கோட்டை தாமிரபரணி ஆற்றில் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

பேராயர். அருட்பெருந்திரு. ஸ்டீபன் நீல் அவர்களின் நினைவு நாள் ஜூலை மாதத்தில் வருகிறது.

4. உலகளாவிய மிகப்பெரிய மிஷினரி இயக்கம் இயேசு சங்கம் என அழைக்கப்படும் இயேசு சபை (Society of Jesus - Jesuit) ஆகும். இந்த மிஷனரி சங்கத்தின் மூலமாக பல கோடி மக்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு கிறிஸ்தவர்கள் ஆனார்கள். தமிழக கத்தோலிக்க கிறிஸ்தவத்திற்கு அடித்தளம் அமைத்த தூய. சவேரியார் எனப்படும் பிரான்சிஸ் சேவியர்.

தூய.அருளானந்தர் எனப்படும் ஜான் டி பிரிட்டோ, தத்துவ போதகர் எனப்படும் ராபர்ட் டி நொபிலி மற்றும் வீரமா முனிவர் எனப்படும் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி ஆகியோர் இந்த இயேசு சபை போதகர்களே.

இந்த மாபெரும் மிஷனரி இயக்கத்தின் நிறுவனரான அருள்தந்தை. இனிகோ என்ற இக்னேசியஸ் லயோலா அவர்களின் நினைவு நாள் (31.07.1556) ஜூலை மாதத்தில் வருகிறது இந்த மாபெரும் ஊழியர்களை நினைவு கூறுவோம் அவர்களது அருட்பணிகளை நம் மனதில் நிறுத்தி இறை அருட்பணிகளில் நம்மையும் உட்படுத்திக் கொள்வோம்.

இழந்த சபை வரலாறுகளை மீண்டும் கட்டியெழுப்பி புதிய வரலாற்றைப் படைப்பதே நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்க நோக்கம் என்பதை நிலைப் படுத்துவோமாக.

நமது சங்கம் திருநெல்வேலி மாவட்டம் மட்டுமல்லாது தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளின் கிறிஸ்தவ வரலாற்றையும் மீட்டெடுக்கும் திருப்பணிக்கு உறுதுணையாக நிற்கும். தமிழகம் எங்கும் உள்ள கிறிஸ்தவ வரலாற்று சங்கங்களோடு நமது சங்கம் இணைந்து உழைக்கும். ஆண்டவருடைய பேரருளால் இக்காரியத்தில் மாபெரும் வெற்றியைப் பெறுவோம்.

ஆண்டவர் தாமே நம்மோடு இருந்து தூய ஆவியானவர் மூலமாக நம்மை பலப்படுத்தி வழி நடத்துவாராக

ஆசிரியர்,
கிறிஸ்தவ வரலாற்று சுவடுகள்

திருச்சபை வரலாறுகள் இப்போது
வீடியோ வடிவில்
உங்கள்
Christian Historical TV

# நெல்லைத் திருமண்டல இரு நூறாண்டு விழாவும் என் சிறு நினைவுகளும்

அருள்திரு. வி. சாமுவேல் ஆபிரகாம்

நெல்லைச் சீமைக்கு சுவிசேஷம் வந்து இருநூறாண்டுகளைத் தொடும் நிலையில், 1980 ஆமாண்டு ஒன்றுபட்ட நெல்லைத் திருமண்டல வரலாற்றின் முக்கிய மைல் கல் என்பதை மனதிற்கொண்டு, அந்நாள் பேராயர் அருட்பெருந்திரு தானியேல் ஆபிரகாம் மற்றும் பேராயப் பெருந்தலைகள் அருட்திரு சவரிதாஸ், அருட்திரு திரவியம் ஏசுதாசன், திரு டி.ஜி.ஜெயசிங், திரு ஜார்ஜ் முல்லர் மற்றும் திரு பெட்பொர்ட் சாலமன் ஆகியோரின் தலைமையில், அருட்திரு ஜே. ஸ்டீபன் மற்றும் அருட்திரு பிச்சமுத்து ஐயரவர்களின்ஊக்கம் மிகுந்த ஒருங்கிணைப்பில், இவ்விழா நடத்தப்பட்டது.

அவ்வருடக் காலண்டரின் ஒவ்வொரு மாதப்பக்கங்களும் நம் திருமண்டிலப் பேராயர்களின்படங்களுடன் அவர்களது ஊழியப் பங்களிப்புகளை வெளிப்படுத்தி, அவ்வருடத்தின் முக்கியத்துவத்தை நம் திருச்சபையாருக்குக் கற்றுக்கொடுத்தது.

அப்போது என் தந்தை வடதிருநெல்வேலியின் வாகைக்குளம் சேகரப்போதகராயிருந்தார்கள். அங்கே நாலாட்டின்புத்தூர்,வானரமுட்டி முதல் இங்கே நாலுவாசல்கோட்டை,அழகுனேரி, மற்றும் திருவேங்கடம்,கலிங்கப்பட்டி வரை பரவியிருந்த வாகைக்குளம் சேகர சபையார் மற்றும் ஆசிரியர்களை ஒன்று திரட்டி, பெரும் எண்ணிக்கையில் நாங்கள் அவ்விழாவில் கலந்துகொண்டோம். பொருட்காட்சிக்காக தயாரிக்கப்பட்ட ஆலய மற்றும் பள்ளி மாதிரிகளை ஏற்றிக்கொண்டு, சங்கரன்கோவில் பஸ் நிலையத்திலிருந்து நெரிசல் மிகுந்த பேரூந்தில் ஏறி, ஆனந்தம் மற்றும் ஆர்வத்துடன் நெல்லை வந்து சேர்ந்தோம்.

ஆரம்பக் கொடியேற்றுவிழா நம் நெல்லைப் பேராலயத்தின் முன்னர் நடந்தது. அர்த்தமுள்ள 'சிலுவைக்கொடியின் நிழலில் சீராய் வளர்ந்தே பெருகுவோம்' அப்போதைய பாடலே!

"வளர்ந்து பெருகுக" என்ற கோஷத்துடன் பிஷப் சார்ஜெண்ட் பள்ளி வளாகத்திலே அமைக்கப்பட்ட பெரும் பந்தலிலே சில நாட்கள் நடந்த அப்பெருவிழா பல அம்சங்கள் நிறைந்ததாயிருந்தது. இதை சித்தரிக்கும் வகையில் கூட்ட அரங்கிற்கு வெளியே வைக்கப்பட்டிருந்த சிறுவிளக்கு அமைப்பு (சீரியல்) மிகவும் அர்த்தமுள்ளதாயிருந்தது.

தென்னிந்தியத் திருச்சபையின் பிரதமப் பேராயர், இலங்கை யாழ்ப்பாணம் பேராயர் அம்பலவாணர் மற்றும் பல திருமண்டிலப் பேராயர்கள் உட்பட சினாட் பெருந்தலைகள், இங்கிலாந்திலிருந்து முன்னாள் நெல்லை மிஷனெரிகள் பேராயர் ஸ்டீபன் நீல் மற்றும் அருட்திரு மக்லாஷன் உட்பட சிலர், பாளை மறைமாவட்ட ஆயர் இருதயராஜ் ஆண்டகை, மேலும் பல அரசியல் தலைவர்கள் வெவ்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். அப்போதைய மத்திய அமைச்சர் ஸ்டீபன் ஒருநாள் கலந்து கொண்டதாய் எனக்கு நினைவு! அருட்திரு ஜேசன் தர்மராஜ் மற்றும் அருட்திரு ஆர்.ஜோசப் மொழிபெயர்ப்பாளர்களாய் உதவினர்.

எல்லாப் பேராயர்களும் பல்லக்குகளில் அமர, ஒரு மாபெரும் வண்ணமய இருநூறாண்டு விழாப் பேரணி பாளை மாநகரின் முக்கிய வீதிகளின் வழியாய் வலம் வந்தது மிகவும் பெருமையாயிருந்தது.

தாமிரபரணி ஆற்றில் 200 பேருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்ட ஆராதனையிலும் பேராயர் ஸ்டீபன் நீல் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆவலுடன் கலந்துகொண்டனர்.

இருநூறாண்டு விழாப் பொருட்காட்சி அரங்கு இன்றைய அரசுப் பொருட்காட்சியைப்போல பல விஷயங்கள் நிறைந்ததாய் இருந்தது. பல வரலாற்று நிகழ்வுக் காட்சிகள் மத்தியில், நாசரேத் மருத்துவமனையின் எலும்புக்கூடு காட்சி ('உருகும் மனிதன்'), மற்றும் யாரோ சிறுசிறு பொம்மைகள் மூலம் இயக்கிய இரகசிய வருகைக் காட்சி என் மனதில் இன்றும் நிற்கின்றன. இப்படி இன்னும் பல சுவாரசியமான அம்சங்கள்!

திருமண்டலத்தின் அனைத்து மக்கள் மற்றும் எல்லா ஊழியர்களின் ஈடுபாடு மிகவும் முழுமையாயிருந்தது. பேராயர் இல்லத்தில் தங்கியிருந்து, என் பெற்றோருடனும் பெரியோருடனும் எல்லா நிகழ்ச்சிகளிலும் தவறாமல் கலந்து கொண்ட எனக்கு அது ஒரு பெரிய அனுபவம்.

இரவு கலை நிகழ்ச்சிகளுக்கான எதிர்பார்ப்பில் திசையன்விளையின் சுருள்வாழ்வீச்சு மற்றும் சிலம்பம் என் மனதில் முதலிடம் பிடித்தது. இன்னொரு இரவில் "மிஷனெரிகளின் வாழ்வில் ஒருநாள்" சிறப்பு நாடகங்கள் வெவ்வேறு சேகரங்கள் மற்றும் நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டன. என் சித்தப்பா முனைவர் திரு சௌந்தர்ராஜ் அவர்கள் டோனாவூர் மேனிலைப் பள்ளிக் குழுவில் நடித்த வாக்கர் ஐயர் நாடகம் என் நினைவிலுள்ளது. எதிரிகளின் சூழ்ச்சியிலிருந்து ஆண்டவர் எப்படி மிஷனெரி வாக்கர் அவர்களை ஒருநாள் அற்புதமாய்க் காப்பாற்றினார் என்பதை விளக்கியது அந்த நாடகம். பின்னாட்களில் இந்த நாடகங்கள் எல்லாம் திரு ஆர் எஸ் ஜேக்கப் அவர்களால் இதே தலைப்பில் ஒரு புத்தகமாக வெளியிடப்பட்டது.

இவ்விழாவுக்கென சிறப்புப் பாடல்கள்

எழுதப்பட்டு, ஆராதனைகளில் பயன்படுத்தப்பட்டன. “வளர்ந்தேபெருகுக என்றே” என்பது கருத்துப் பாடல். அப்போது கற்றுக்கொண்ட “உள்ளத்தில் நன்றியால் நிரம்பிப் பாடுவோம்... உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் தொண்டின் மகிமையும்..” என்ற பாடலின் வரிகள் இன்றைக்கும் என்னைப் புல்லரிக்க வைக்கின்றன! நாம் பயன்படுத்தும் “இருநூறாண்டு கீதங்கள்” இவ்விழாவின் நினைவாக வெளியிடப்பட்ட பாடல் புத்தகமே!

முக்கிய ஆராதனையில் மிஷனெரிப் பேராயர் ஸ்டீபன் நீல் (தமிழில்?) கொடுத்த செய்தி இன்றும் என் மனதில் உள்ளது. (அப்போது எனது வயது 10!): சங்கீதம் 46:4,5 - “ ஒரு நதியுண்டு, அதின் நீர்க்கால்கள் தேவனுடைய நகரத்தையும்... சந்தோஷிப்பிக்கும். தேவன் அதில் நடுவிலிருக்கிறார்; அது அசையாது...” அவ்விழாவில் கலந்து கொண்ட போதும், அந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளைப் பேசும்போதும் அதீத அறிவுக்கூர்மையும் ஆழமான அர்ப்பணமும் கொண்ட அந்த மிஷனெரி பிஷப் நீல் என்ன சிந்தித்திருப்பார்? பின்னாட்களில் வேதாகமக் கல்லூரியில் கற்கும் போது தான் தெரிந்தது அவர் எவ்வளவு பெரியமிஷனெரி வரலாற்று மேதை என்பது !


பேராயர் நீல்

1982-’83 ல் அவரை இங்கிலாந்தில் சந்தித்த என் தந்தையிடம் பேராயர் நீல் நம் திருமண்டிலத்தின் விஷயங்களை விலாவாரியாக ஒரு வரைபடத்துடன் விவாதித்திருக்கிறார். திருமறையூர் வேதாகமக் கல்லூரி மதுரைக்குச் சென்றதைக் குறித்து வேதனைப்பட்ட அவர், நம் திருமண்டிலம் ஊழிய வசதிக்காக சீக்கிரம் இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்பதைப் படத்துடன் விளக்கியிருக்கிறார். இந்தியா திரும்பிய என் தந்தை அதைக் குறித்து குடும்ப ஜெபத்தில் ஜெபித்தார். பாரத்துடன் பலரிடம் பேச ஆரம்பித்தார். ஆண்டவர் பல ஆண்டுகளுக்குப் பின் தம் நேரத்தில் அதை நிறைவேற்றினார்.

இன்று வளர்ந்து பெருகும் இருபெரும் திருமண்டிலங்கள்! பல புதிய சபைகள்... பெருகி வரும்பற்பல ஊழியங்கள் !

எனினும், ஒற்றுமையைக் காப்பதும், சபையை ஒன்றாய்த் திரட்டுவதும் இனியும் அவ்வளவு எளிதாய்த் தெரியவில்லை. எல்லாருடைய அன்பையும் மதிப்பையும் பெற்றத் திருச்சபைத் தலைவர்களையும் காணமுடியவில்லை.

1983 ஆமாண்டு என் தந்தை ஒரு பாரம்பரியமிக்கபுதிய சேகரத்தில் ஊழியப் பொறுப்பெடுத்தார்கள். ஆராதனையில் “இருநூறாண்டு கீதங்களைப்” பயன்படுத்தவேண்டும் என்று கொஞ்சம் அழுத்தம் கொடுத்ததால் பொங்கியெழுந்தது எதிர்ப்பு! பல்வேறு பின்னணியங்களிலிருந்து வரும் சபைகளைக் கொண்ட நம் திருச்சபையை ஒரே பாணியில் நடத்துவது சாத்தியமல்ல.

அதே வேளையில், கடந்த சில ஆண்டுகளுக்குள் நம் திருச்சபை கடந்து வந்த பாதைகள் இப்போது பலரது உள்ளத்தில் ஒரு வரலாறு சார்ந்த ஏக்கத்தை எழுப்பியுள்ளதும் உண்மை. இந்த ஏக்கமும் ஆர்வமும் ஒரு பெரும் பாரமாய் மாறட்டும், ஜெபதீபமாய் எழும்பட்டும்!

அடுத்த 10 ஆண்டுகளில் நமது திருச்சபைகளின் 250 ஆவது ஆண்டுவிழா! புதிய அர்ப்பணிப்புக்கு நேராய் நம்மை இழுத்துச் செல்லும் ஒரு அர்த்தமுள்ள பெருவிழாவிற்கென்று நாம் ஆயத்தப்பட இந்த “திருச்சபை வரலாற்றுக் குழு” வை ஆண்டவர் பயன்படுத்தட்டும்.

**கிறிஸ்தவ விழாக்களின் நோக்கங்கள் என்ன?**

பூர்வ நாட்களைத் திரும்பிப்பார்
தேவ கிருபைகளை நினைத்துப்பார்
தேவ சமூகத்தில் கூடிடு
அவருக்கு நன்றி சொல்
விசுவாசத்தில் பலப்படு
அவரது வார்த்தையைத் தியானி
குறைவுகளுக்காய் மன்னிப்புக் கேள்
புதிய தரிசனம் பெற்றிடு
மறு அர்ப்பணம் செய்
தொடர்ந்து ஓடு

இந் நிகழ்வுகள் மூலம் அடுத்த தலைமுறைக்கு வரலாற்று உண்மைகளைக் கடத்திக் கொடுப்பது,
பக்தி வாழ்வின் இத்தகைய அர்த்தமுள்ள விழா மாதிரிகளை அவர்களுக்காக ஏற்படுத்துவது

**தேவனுடைய இந்தச் சிறுமந்தை இன்னும் வளர்ந்து பெருகட்டும்!**
**தேவனுக்குச் சித்தமானால், 2030-ல் மீண்டும் சந்திப்போம்!**


## வரலாற்று எழுத்தாளர்களுக்கு அரிய வாய்ப்பு

தங்களுடைய வரலாற்று படைப்புகளை எழுதி வெளியிட துடித்துக்கொண்டிருக்கும் எழுத்தாளர்கள் வளரும் இளம் எழுத்தாளர்களையும் ஊக்குவிக்கும் விதமாக உங்களுடைய உங்களுடைய அனைத்து படைப்புகளையும் இலவசமாக வெளியிட தயாராக இருக்கின்றது
திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம்.

இலவச புத்தக டிசைன்கள், புத்தகத்தை வெளியிடுவதற்கும் நாங்கள் உதவுகிறோம்.
மேலும் தகவல்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளவும்


**திண்ணை பள்ளிகளில் மேட்டுக் குடிகளிடம் முடங்கிக் கிடந்த கல்வி என்னும் அறிவாயுதத்தை சாமானியர்களுக்கும் சாத்தியமாக்கியவர். கனம் ரேனியஸ்**





# நம்ம ஊரு பண்டிகைகள்

அருள்திரு. ஜாண் சாமுவேல்

பண்டிகைகளும், விழாக்களும் மக்களை ஒன்றிணைப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும். காலம் காலமாக மக்கள் தங்கள் குடும்பத்தோடும், உறவினர்களோடும், தாங்கள் சார்ந்த சமுதாயத்தோடும் கூட விழாக்களை ஆசரித்து மகிழுவார்கள். பொதுவாக விழாக்களில் மக்கள் கூடுவதினால் அவர்களுக்குள்ளாக நல்ல ஐக்கியமும், உறவும் வளப்படும். இந்தியாவில் கிழக்கத்திய கம்பெனியினர் வருகைதந்தபொழுது மக்களை தங்கள் பக்கம் ஆதரவாக வைத்துக்கொள்ள மக்களின் பண்டிகை மற்றும் விழாக்களை ஊக்குவித்தார்கள். கம்பெனியினர் கிறிஸ்தவர்களாக இருந்தாலும் கூட மிஷனெரிகள் ஊழியம் செய்வதற்கு பெரும் தடையாக இருந்தனர். ஆதிக்காலங்களில் மக்கள் இயேசுவின் அன்பை அறிந்து கிறிஸ்தவர்களாக மாறினாலும் அவர்கள் விட்டுவந்த பண்டிகைகளையும், விழாக்களையும் விடாதிருந்தார்கள். இவை மிஷனெரிகளுக்கு மாபெரும் சவாலாகவே இருந்தது. இவ்வழக்கத்திலிருந்து மக்களை மீட்டெடுத்து கிறிஸ்தவத்தில் வேரூன்ற செய்வது கடினமான ஒன்றாயிற்று. எனவே மிஷனெரிகள் கலாச்சாரத்தோடு ஒத்த பண்டிகையினை கிறிஸ்தவ பாரம்பரியங்களோடு கூட ஒன்றிணைத்தனர். காலப்போக்கில் அது பெரும் வரவேற்பை பெறவே மக்கள் தாங்கள் விட்டுவந்த வழியினை நிரந்தரமாக மறக்கச் செய்தது. கிறிஸ்தவம் வளர்ந்துப் பெருக ஆரம்பித்ததும் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப விழாக்களும் பண்டிகைகளும் ஆசரிக்க ஆரம்பித்தார்கள். ஆரம்பக்காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட பண்டிகைகள் இன்று பல மறக்கப்பட்ட சூழ்நிலையில் உள்ளது. தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்திற்கு உட்பட்ட சேகரங்களில் கொண்டாடப்பட்ட ஒரு சில பண்டிகையின் தொகுப்புகளை இக்கட்டுரையில் காண்போம்.

## தேங்காய் பண்டிகை

கிறிஸ்டியான் போலே ஐயரவர்களால் 1821 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஒரு கிறிஸ்தவக் கிராமம் இருந்தது. ஜெர்மனி தேசத்தில் பிறந்து வளர்ந்த ஐயரவர்கள் தரங்கம்பாடிக்கு ராணுவ குருவாக வந்திறங்கினார்கள். சிறிது காலம் அங்கு பணிசெய்துவிட்டு திருநெல்வேலி பகுதிக்கு கிறிஸ்துவின் அன்பை பகிர வந்தார்கள். உடன்குடி அருகே இருந்த சொக்கன்குடியிருப்பு என்ற கிராமம் அவருக்கு மிஷனெரி பாரத்தை ஏற்படுத்தியது. ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களால் நிறைந்த அந்த கிராமத்தில் இயேசுவின் அன்பை போதிக்க ஆரம்பித்தார். விக்கிரக வணக்கத்தினை விடும்படியாக வலியுறுத்தினார். ஐயரவர்களின் போதனையில் கோபம் மூண்ட ஜனங்கள் அவரை அடித்து விரட்டினார்கள். வேதனையோடு நடந்துவந்த ஐயரவர்களை சொக்கன்குடியிருப்புக்கு அருகிலிருந்த ஊரான கொழுந்தட்டு கிராமத்தில் ஒருவர் ஏற்றுகொண்டு அவரைக் காப்பாற்றினார். இறுதியில் அவர் இயேசுவின் அன்பை ஏற்றுக்கொண்டு, ரோமன் கத்தோலிக்க திருச்சபையை விட்டு விலகினார். இது அம்மக்களிடையே பெரும் எதிர்ப்பைக் கொடுத்தது. அவரை காப்பற்ற வேண்டுமென்கிற நோக்கத்தோடு கூட போலே ஐயவர்கள் 11 ஏக்கர் இடம் வாங்கி அவரோடு கூட புதிதாக அவருடைய ஊழியத்தின் விளைவாக கிறிஸ்துவை ஏற்றுகொண்டவர்களையும் குடியேற்றினார். போலே ஐயரவர்களால் ஏற்படுத்தப்பட்ட அந்த கிராமமே போலையர்புரமாக விளங்கியது. போலையர்புரத்தின் மக்கள் தேங்காய் பண்டிகை என்கிற பண்டிகையை இந்நாள்வரையும் கொண்டாடி வருகிறார்கள். எப்பொழுது இது ஆரம்பமானது என்பதை அறிவதில் சிக்கல் காணப்பட்டாலும் கூட மக்கள் ஆதிக்காலம் தொட்டு இந்நாள்வரையிலும் தவறாமல் ஆசரிக்கிறார்கள். தேங்காய் பண்டிகையானது பிரசன்ன திருநாள் அன்று ஆசரிக்கப்படுகிறது. இந்நாளன்று வாழைத் தண்டின் குருத்துப் பகுதியினை எடுத்து ஆலயத்தின் தெருவில் வழி நெடுகே நட்டி வைப்பார்கள். அந்தத் தண்டின் மேல் பாதி தேங்காயினை வைத்து அதற்குள்ளாக தேங்காய் எண்ணெய் ஊற்றி, சிறிது அரிசியினை துணியில் சுற்றி திரி போன்று அமைத்து எரிய விடுவார்கள். இந்த தேங்காய் விளக்குகள் கிறிஸ்து புறஜாதியினருக்கு வெளிப்பட்டதின் அடையாளமாக வைக்கப்படுகிறது. ஆராதனை நிறைவுபெற்றவுடன் தேங்காய் விளக்குகளை ஏலம் விடுவார்கள். மக்கள் உற்சாகத்தோடுகூட இதனை ஏலம் பெற்று செல்கிறார்கள். இதுவே அப்பகுதியில் தேங்காய் பண்டிகை என்று ஆசரிக்கப்படுகிறது.

## கோழிப் பண்டிகை

நெடுவிளை சேகரத்திற்குட்பட்ட திருவரங்கநேரி என்ற திருச்சபையில் இந்நாள் வரையிலும் ஆலயப் பிரதிஷ்டை பண்டிகை நேரங்களில் கோழி விழா மிக பிரமாண்டமாக ஆசரிக்கப்படுகிறது. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்கள் தங்களுக்கென ஆலயத்தைக் கட்டினார்கள். அவ்வாலயத்தின் தேவைகளை சந்திப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. விளக்குகள் எரிப்பதற்கு அக்காலங்ளில் மண்ணெண்ணெய் பயன்படுத்தப்பட்டது. அந்த தேவைகள்

கூட சந்திக்கப்படமுடியாத சூழ்நிலை. அக்காலங்களில் மண்ணெண்ணெய் பெறுவதற்கு பண்டைமாற்று முறையாக கோழிகளைக் கொடுத்து மண்ணெண்ணெய் வாங்குவார்கள். எனவே ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு கோழி கொடுக்க வேண்டும் என்று திட்டமிட்டு ஆலயத்தின் தேவைகளை சந்தித்திருக்கிறார்கள். அவ்வழக்கமே நாளடைவில் தங்கள் தேவைகள் சந்திக்கப்பட்டபிறகும் கூட மக்கள் வழக்கத்தினை மாற்றாமல் பண்டிகையை ஆசரித்து வருகின்றார்கள். இந்நாட்களில் தங்களிடத்திலுள்ள பொருட்களைக் கொண்டு பண்டிகையின் தேவைகளை இன்னும் அதிகமாக சந்திக்கும்படியாக இவ்விழாவினைக் கொண்டாடுகின்றார்கள். விழாவின் அன்று ஆலயத்தில் முன்பகுதியில் கயிறு கட்டப்பட்டிருக்கும். திருச்சபையார் தங்கள் வீடுகளில் வளர்க்கும் கோழிகளைக் கொண்டு வந்து அந்த கயிற்றில் வரிசையாக கட்டிவைப்பார்கள். இந்நாட்களில் மக்கள் ஆடு மற்றும் மாடுகளையும் காணிக்கைகளாக கொண்டுவந்து படைக்கிறார்கள். சிறப்பு ஆராதனை நிறைவு பெற்றவுடன் அந்தக் கோழிகள் அனைத்தும் ஏலம் விடப்பட்டு அந்த காணிக்கைப் பணம் பிரதிஷ்டை பண்டிகையின் சிறப்பு நாட்களுக்காக செலவிடப்படுகிறது.

**விவிக்கா பண்டிகை**

ஆனந்தபுரம் ஊர் மக்களால் கொண்டாடப்படும் பண்டிகை விவிக்கா பண்டிகை. சுவிசேஷ பண்டிகைக்கு மற்றொரு பெயர் தான் விவிக்கா பண்டிகை! விவிக்கா என்பது ஒருவகை இனிப்பு இட்டிலி, நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்ற வாக்கின்படியாக இயேசுவை அறிவிப்பதற்காக ஒரு வாரத்தை ஒவ்வொருதிருச்சபையும்விசேஷித்தவாரமாக ஆசரிக்கும். அப்படியே சுவிசேஷவாரத்தின் இறுதிநாளான ஞாயிறு அன்று ஆனந்தபுரத்தில் மக்கள் சுவிசேஷ ஞாயிறை விவிக்கா பண்டிகை என்று அழைக்கிறார்கள். சனிக்கிழமை இரவே விவிக்கா அவிப்பதற்கு மாவு தயார் செய்துவிடுவார்கள். ஞாயிறு அதிகாலை எழுந்து மக்கள் தங்கள் வீடுகளில் விவிக்கா அவித்து அதனை பாத்திரத்தில் எடுத்துவைத்துக் கொள்ளுவார்கள். சுவிசேஷ ஊழியம் செய்வதற்காக அருகில் இருக்கும் புறமதஸ்தர்கள் வாழும் கிராமத்தை தெரிவு செய்துகொண்டு செல்லுவார்கள். பசி எடுக்கும் போது அதனை சாப்பிட்டுக் கொண்டு, இயேசுவின் அன்பையும் எடுத்துக் கூறுவார்கள். ஊழியத்தில் இறுதியில் மூன்று மணியளவில் அனைவருக்கும் உணவு கொடுக்கப்படும். இப்படியாக மக்கள் விவிக்கா பண்டிகையை இயேசுவின் அன்பை பகிர்வதோடு கூட கொண்டாடுவார்கள் என்பது செவிவழிசெய்தி.

**கிழங்கு பண்டிகை**

சேர்வைக்காரன்மடம் உட்பட சாயர்புரம் பகுதியில் ஒரு சில ஆலயங்களில் கிழங்கு பண்டிகை கொண்டாடப்படுகின்றது. செம்மண் வளம் நிறைந்த பகுதியாகிய அப்பகுதியில் பனைமரங்கள் மிகுதியாகக் காணப்படுகின்றது. பனைசார்ந்த தொழிலை செய்யும் மக்கள் அதிகமாகக் காணப்படும் அப்பகுதியில் அறுப்பின் பண்டிகைப் போன்று கிழங்கு பண்டிகையும் ஆசரிக்கிறார்கள். பனங்கிழங்கு காலத்தில் ஒரு நாளை ஏற்படுத்தி, அவர்கள் நிலத்தில் விளையும் பனங்கிழங்குளை ஆலயத்தில் கொண்டு படைக்கிறார்கள். பனைத் தொழிலை மக்கள் கைவிட ஆரம்பிக்கவே தற்போது மிக குறைந்த அளவிலான ஆலயங்களிலே இப்பண்டிகைகளை மக்கள் ஆசரிக்கிறார்கள். இக்காலங்களில் நடைபெறும் பண்டிகைகளில் மக்கள் பனங்கிழங்குகளோடு கூட மற்ற விளைபொருட்களையும் சேர்த்து படைக்கிறார்கள்.

**உளுந்து பண்டிகை**

குருக்காட்ர் சேகரத்தின் மக்கள் இப்பண்டிகையினைக் கொண்டாடியிருக்கிறார்கள். நெல் விளைந்து அறுவடை முடிந்த பிறகு வயலில் பயிர் வகைகளை விதைப்பது வழக்கம். பயிர் வகைகள் விளைந்ததும் அறுவடை செய்து முதல் விளைவை ஆலயத்தில் கொண்டு வந்து படைப்பார்கள். இதையை உளுந்து பண்டிகை என்று அழைக்கிறார்கள். குருவானவர் திருவிருந்து ஆராதனை நடத்தவரும் நாள் அன்று இப்பண்டிகை ஆசரிக்கப்பட்டது. மக்கள் அனைவரும் தங்கள் வயல்களில் விளைந்த உளுந்து, சிறுபயிறு, தட்டாம்பயிறு, பெரும்பயிறு போன்ற பயிர்வகைகளை ஆலயத்தில் கொண்டுவந்து படைப்பார்கள். ஆராதனை நிறைவுபெற்றவுடன் மக்கள் காணிக்கைகளாகப் படைக்கப்பட்ட ஆலயத்தின் தேவைகளுக்காகப் பொருட்களை ஏலம் விட்டு பணத்தை பயன்படுத்தியிருக்கிறார்கள்.

வரலாற்றின் பக்கங்களைத் திருப்பிப் பார்ப்போமானால் இன்னும் எத்தனையோ விழாக்களும், பண்டிகைகளும் நடைமுறை வாழ்விலிருந்து மறைந்து போய் இருக்கின்றன என்பதுதான் உண்மை! பாரம்பரியமாகக் கொண்டாடப்பட்ட பண்டிகைகளுக்குப் பின்னால் அர்த்தமுள்ள வாழ்க்கைமுறை ஒன்று அமைந்திருந்தது என்பது பண்டிகையின் கருப்பொருளிலிருந்து அறிய முடிகிறது.


## படைப்புகளை அனுப்புவோர் கவனத்திற்கு...

1. படைப்புகளை அனுப்புவோர் நகல் எடுத்துக் வைத்துக்கொண்டு அனுப்புவும்.
2. படைப்புகளை மின்னஞ்சல் மூலமாக அனுப்புவது மட்டுமே அனுப்ப வேண்டும். பிரசுர விபரம் 60 நாட்களில் தெரிவிக்கப்படும்.
3. மொழிபெயர்ப்புகளை அனுப்புவோர் மூலத்தின் ஒளிநகலையும் இணைக்க வேண்டும்.
4. மின்னஞ்சலில் படைப்புகளை அனுப்புவோர் பிரதி மாதம் 15ம் தேதிக்குள் அனுப்ப அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.
5. படைப்புகளை அனுப்புவோர் முழு முகவரியும் உங்களுடைய முழு பெயர், மின்னஞ்சல் முகவரி, புகைப்படம், தொலைபேசி எண் மறக்காமல் குறிப்பிட வேண்டும்.
6. சந்தா தொடர்பான விபரங்களை 04633 290401 +91 9176780001, 7538812218

விளம்பரங்களை பிரசுரிக்க ஆசிரியரை தொடர்பு கொள்ளவும்.

# மிஷன் பண்டிகை

தென்னகத்தின் மீட்பிற்காக மேலை நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு மிஷனரிகளாக வந்த பல போதகர்கள், அறிஞர்கள் மற்றும் மருத்துவர்கள் அரும் பெரும் தொண்டாற்றினார்கள். அவர்களின் முயற்சிகளுக்கு பலனாகவே இன்று தென் தமிழகத்தில் பல நூறு பள்ளிக்கூடங்கள், ஆலயங்கள், சமுதாய மேம்பாட்டுப் பணிகள் போன்றவை என்றும் அழியாது உயர்ந்து நிற்கிறது. "திருநெல்வேலியின் அப்போஸ்தலன்" என்று அழைக்கப்பட்ட முன்னோடி ஊழியர் ரேனியஸ் ஐயர் அவர்கள் இத்தகைய சிறப்புமிக்க தொண்டாற்றியது மட்டுமல்லாது. மக்கள் மனதில் பதிந்திருந்த ஜாதிவெறி, மூடநம்பிக்கைகள், ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றிலிருந்து விடுதலை பெற அதிக முயற்சி எடுத்தார். அக்காலத்தில் புதிதாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட மக்களுக்கு பிற மதத்தினரால் கடும் உபத்திரவம் ஏற்பட்டது. எனவே அப்பகுதிகளில் மிஷன் சார்பில் நிலங்களை வாங்கி, அங்கு புதிய கிறிஸ்தவர்களை குடியேறும் படி செய்தார். இதனால் டோனாவூர் உட்பட சுமார் 25 கிறிஸ்தவ கிராமங்கள் ரேனியஸ் ஐயர் அவர்களால் உருவாக்கப்பட்டது. இக்கிராமங்களில் செயல்பட்டுவந்த சபைகளில் பல ஒழுங்குமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அனுதினமும் காலை மாலை ஆராதனை, தேவ செய்தி, ஆசிரியர் பணியுடன் கூடிய சபை ஊழியர், ஒய்வு நாள் அரிசி காணிக்கை திட்டம், ஒரு நாள் வருமான காணிக்கை படைத்தல், ஆலய பரிபாலன நிதித்திட்டம், மாம்பழ சங்கம் போன்றவை இன்று வரை மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

1832 ஆம் ஆண்டு டோனாவூர் சேகரத்தில் ஏற்பட்ட காலரா நோயினால் மக்கள் பலர் உயிரிழந்தனர். இதனால் பலர் அனாதைகளாகவும், பல பெண்கள் விதவைகளும் ஆயினர். அவர்களுக்கு உதவ "டோனாவூர் சேகர சகாய நிதி" ஆரம்பிக்கப்பட்டது. இந்நிதி உதவியால் கிறிஸ்தவ சபைகளில் இருந்த ஏழை கைம்பெண்கள் பயன்பெற்றனர். இதன் பின்பு ஊழியரின் மனைவிகள் விதவைகளாக நேரிடின் அவர்களது பராமரிப்புக்காக ரேனியஸ் பல திட்டங்களை தீட்டினார். 1834 ஆம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற மாதாந்திரக் கூட்டத்தில் "திருநெல்வேலி CMS உபதேசிமார் உபாத்திமார் கைம்பெண் நிதியை" ஆரம்பித்தார். அதற்கு ஊழியரே உதவ வேண்டுமென ரேனியஸ் கேட்டுக்கொண்டார். அடுத்த மாத ஜூலை மாதம் மாதாந்திர கூட்டத்தில் ஊழியர்களின் மனைவிகளும் பங்கேற்று சிறப்பு காணிக்கை சேகரிக்க கேட்டுக்கொண்டனர்.

அப்படியே 1834 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஒன்பதாம் தேதி புதன்கிழமை அன்று சங்க கூட்டம் நடைபெற்றது. அனைத்து சபை உபதேசிமாறும் உபாத்திமாரும் தங்கள் மனைவியருடன் பாளையங்கோட்டைக்கு வந்தனர். மத்தியான வேளையில் அனைவரும் ஆலயத்தில் ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுத்தனர். ரேனியஸ் ஐயர் பிரசங்கித்து, ஜெபத்துடன் சங்கத்தை தொடங்கி வைத்தார். அன்றைய நாட்களில் மாம்பழ விளைச்சல் அதிகமாக இருந்ததால் இக்கூடுகைக்கு "மாம்பழ சங்கம்" எனப் பெயரிடப்பட்டது. அன்று நிறுவப்பட்ட சங்க ஸ்தோத்திர கூட்டம் வருடந்தோறும் ஜூலை மாதம் 9 ஆம் தேதியிலாவது அல்லது அதற்கு சமீபித்த புதன் கிழமையிலாவது நடைபெற்று வருகிறது. "மாம்பழ சங்கம்" என்றும் "திருநெல்வேலி அத்தியட்சாதின கைம்பெண் சங்கம்" எனவும் அழைக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஆயிரமாயிரம் விதவைகள் மற்றும் பெண்கள் பயன் பெற்று வருகின்றனர்.

அயல்நாட்டில் இருந்து வந்த ஒரு மனிதன் தென் தமிழக மக்கள் மேல் இவ்வளவு அக்கறையுடன் பணி செய்ய முடியும் என்றால், இங்கேயே பிறந்து வளர்ந்த நமக்கு எத்தனை அதிகமான பாரம் ஏற்பட வேண்டும். அவர் விட்டுச் சென்ற பணிகளை இன்று நாம் எத்தகைய தரிசனத்தோடு கடைப்பிடித்து வருகிறோம். ஆண்டவர் பாதத்தில் அமர்ந்து, நம்மை நாமே சற்று ஆராய்ந்து பார்த்து அர்ப்பணிப்போம்.

ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள். 1 கொரிந்தியர் 10:31

● திருமதி.நிருபா ஜேசுவடியான்

## யார் மிஷனரி ?





சமுதாயத்தில் நிலவிய தீமையை வேரோடு பிடுங்கியவர்கள்
சமுதாய மாற்றத்திற்கு காரணமான நபர்கள்
சமுதாய கரைகளை நீக்கிய மாமனிதர்கள்
தனிமனித சுதந்திரத்துக்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் வித்திட்டவர்கள்
சுவிசேஷ ஊழியத்தை சிறப்பாக செய்தவர்கள்
கல்வி பணி, மருத்துவப்பணி, சிறைச்சாலை ஊழியம் என்று பல வழிகளில் தான் சந்தோஷப்பட்டது மட்டுமல்லாமல் பிறரையும் சந்தோஷப்படுத்தி கர்த்தரைப் பிரியப்படுத்தி வாழ்ந்தவர்கள்
தொழுநோயாளிகளைக் கண்டு தூரவிலகிப் போகாமல் தொழுநோய்க்கு சிகிச்சையளித்ததுமட்டுமல்லாமல் அவர்களின் மறுமலர்ச்சிக்கு கனவானவர்கள்.

சகோதரி.வேளாங்கன்னி

# தேவையில்லையே!


**ஆலயமணி காதில் கேட்பதில்லையே!**
**பாடும் கீர்த்தனையில் இராகதாளமில்லையே1**
**பரவசப் பாடல்களில் பக்தியேதுமில்லையே!**
**பாவ அறிக் கைலிலென் பங்கில்லையே!**
**பத்து கற்பனை சொல்வதிலே இயேசில்லையே!**
**வேதவசனம் படிப்பதிலே தெளிவில்லையே!**
**நான்கு பாடம் விளக்குதற்கு நேரமிசிலையே!**
**குப்பையை சிலரும் கோழி ஆயரில்லையே!**
**ஆலய அருளுரையில் ஆழமில்லையே!**
**காணிக்கை கேட்டதற்கு வெட்கமில்லையே!**
**விசுவாச அறிக்கை கிறிஸ்தவர்க்கில்யே!!**
**காணிக்கைக்கு நன்றி கூறல் முறையில்லையே!**
**ஆசீர்வாகத்தட்டு ஏழைக்கில்லையே!**

**வீணான விளம்பரத்திற்கு இடமில்லையே!**
**திருவிருந்தில் பங்கேற்றும் திருப்தில்லையே!**
**முடிவும்வரை இருப்பதற்கு முடியவில்லையே!**
**வாக்குதத்த அட்டையில் உண்மையில்லையே!**
**கிளிசாஸ்த்திரம் பார்ப்பதும் வேரிலையே!**
**காணிக்கை ஏலமிடல் ஏற்பதில்லையே!**
**முட்டையொன்று மூவோயிரம் நியாயமில்லையே!**
**ஏலத்திலே ஏழைக்கு பங்கில்லையே!**
**சபையாரைக் காண்பதிலே விருப்பமிலையே!**
**ஆலயம் சென்றுவந்தும் ஆசியில்லையே!**
**சடங்குக்கான வழிபாடு தேவையில்லையே!**

● அருள்திரு.லாசரஸ் செல்வநாதன்

---

அருட்பணியாளர் ராபர்ட் கால்டுவெல் - 1838ம் ஆண்டு கிறிஸ்தவ மிஷனரியாக தமிழகம் வந்த ராபர்ட் கால்டுவெல், பின்னர் தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்று, 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்', 'திருநெல்வேலி வரலாறு' போன்ற பல அரிய நூல்களை எழுதி சரித்திரம் படைத்த நிகழ்வுகள் உள்பட அனைத்து விவரங்களும் இந்த நூலில் இடம்பெற்று இருக்கின்றன. இந்தியா வருவதற்கு அவர் மேற்கொண்ட கடுமையான கப்பல் பயணம், சென்னையில் 3 ஆண்டுகள் வாழ்ந்த போது பெற்ற அனுபவங்கள், இடையன்குடியில் பொறுப்பு ஏற்பதற்காக சென்னையில் இருந்து நடந்தே இடையன்குடி சென்றது, வழியில் தஞ்சைப் பெரிய கோவில், ஸ்ரீரங்கம் கோவில், மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆகியவற்றைப் பார்வையிட்டது, இடையன்குடியில் பலத்த எதிர்ப்புக்கு இடையே மதப் பிரசாரம் மற்றும் நலத்திட்டப் பணிகளை மேற்கொண்டது போன்ற பல தகவல்கள் விரிவாகத் தரப்பட்டு இருக்கின்றன. கடற்கரைப் பகுதிகளில் அவர் நடத்திய அகழாய்வுப் பணிகள் பற்றியும் புதிய செய்திகள் சொல்லப்பட்டு இருக்கின்றன. அனைத்து திராவிட மொழிகளுக்கும் சமஸ்கிருதம் தாய் மொழி என்று பலரும் எண்ணிய நேரத்தில், தமிழ் மொழி, சமஸ்கிருதத்தின் துணை இன்றி இயங்கக் கூடிய தனித்துவம் மிக்க மொழி என்பதை கால்டுவெல் உலகம் அறியச் செய்தது இந்த நூலில் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டு இருக்கிறது. கால்டுவெல்லின் குடும்பம் மற்றும் அவரது இறுதி நாட்கள் ஆகியவற்றையும் கொண்டு இருக்கும் இந்த நூல் மூலம், ராபர்ட் கால்டுவெல் பற்றி முழுமையாக அறிந்துகொள்ளலாம்.




ஆசிரியர்: யோ.ஞான சந்திர ஜாண்சன்

வெளியீடு: மோரியா ஊழியங்கள்,
31/33, தண்ணீர்த் தொட்டிச்சாலை,
எம்.எம்.டி.ஏ.குடியிருப்பு,
அரும்பாக்கம்,
சென்னை-106
விலை: ரூ300
செல்போன்: 9444961106

## புத்தக அறிமுகம்

உங்கள் புத்தகத்தையும் அறிமுகபடுத்துவதற்கு எங்களை தொடர்புகொள்ளவும்

# ஜுலை மாதம் பிறந்த நாள் கொண்டாடும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

Richard Francis,ARDILL
Manikkvasagam, ASIRVATHAM
Masillamani, SRINIVASAGAM
Visuvasam, GNANABARANAM
D G S Dhinakaran
Daniel, Wilson
Devapiriam Vedamuthu
Josiah, JOSEPH
Norman Henry Tubbs
Edmund Stileman,CARR
Pakkianadan ,GNANAKKAN
HENRI PRUNIER M.E.P FIRST BISHOP OF SALEM
Ernest Forrester Paton
Pakkianathan Gnanayutham

Bartholomäus Ziegenbalg
John Christian Frederick Heyer
Franics Bernard, JAMESON
Koilpillai, GNANAMUTHU
Karuvelam Thangiah, ARUMANAVAGAM
William Devasagayam, GNANAPRAGASAM
David Arulappan
Jesudason Abrabum, SAMUEL
Paul Brand
Vedanayagam, Simeon
Joseph David
Robert Ponniah, PETER
Atfred Perey, RANDLE

Rama Krishna, ABRAHAM
Joseph, JESUDASAN
Luke, JOHN
Gurubatham Devasigamani,EDWARD
John Murdoch (literary evangelist)
Samuel David, GNANAMUTHU
Peter Percival
Abraham K S
Edward Dent
Arthur Abbott,DIGNUM
Joseph Daniel Jaenioke
George Theodore, SELWYN
Selwyn George Theodore

# ஜுலை மாதம் நினைவு நாளை ஆசரிக்கும் மிசனரிகள், பாடலாசிரியர்கள்,குருவானவர்கள்

Arumannayagam Vedakkan
Savarimuthu Madurendram, DEVADAS
Karuvelam Thangiah, ARUMANAVAGAM
ERNEST HEUMAN -1ST BISHOP OF TRANQUBER
John Matthias , TURNER
Perianayagam, Swamiadian
Perumal Abraham
Thomas Fanshawe, MIDDLETON
Paul Brand
Pernpettan samuel
Donald McGavran
Vedanayagam Sargunam
Peter Percival
Samuel David, GNANAMUTHU
JOSS, WALTER

Edward Newman
Maduranayagam Periyanayahan
Abraham Samuel ,VORES
George john Trevor, SPENCER
IRH Gnanadason
Charles Thomas Studd-C. T. Studd
Charles Blackman
Gnanamuthu Sargunam
Srinivasagam Maduranayagam
Devapiriyan Gnanapragasam
David Daniel,Rajamani
Amirthapendi Asirvatham, JESUDOSS
Gurubatham Devasigamani,EDWARD
Stephen Neill, Charles Neill
Navamani annabai
Devakan,DHARMAKKAN

Samuel , SATTIANADAN
Sister Sarah Navaroji
Sumuel Gnanayuthim,MADURANAYAGAM (Maduram)
Manikkam, DURAISWAMI
Ponniah Abraham, SAMUEL
DAVID BECKCHEL -2ND BISHOP OF TRANQUBER
AUGUSTUS YOUNKER
Thomas Brotherton
Yesudian ,GNANAPRAGASAM
Aaron Pitchaimuthu
Vedamanikkum, ASIRVADAM
Pon Lazarus
Jesudason, ALBERT
Ignatius of Loyola



# நூற்றாண்டு விழா சுவாரசியங்கள்

● MANNA

சி எம் எஸ் சங்க நூற்றாண்டு விழா

அருள்பெருந்திரு ஹென்றி வாலர் (1915 - 1922) இவரது காலத்தில் சி எம் எஸ் சங்க சி நாற்றாண்டு விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்த விழா 1920 ல் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும். ஆனால் 1921 ம் ஆண்டு பெப்ருவரி திங்கள் 22 முதல் 25ம் நாள் வரை பாளையங்கோட்டையில் நடை பெற்றது. இதை கேட்ட சி எம் எஸ் தாய்ச்சங்கத்தார் தமது வாழ்த்துச்செய்தியை நெல்லைக்கு அனுப்பி வைத்து விழா நல் முறையில் நடைபெற உற்சாகமூட்டினர்.

அச்செய்தி வருமாறு :

சி எம் எஸ் ஊழிய நூற்றாண்டு விழாவைத் திருநெல்வேலி மக்கள் கொண்டாடச் செய்திருக்கும் ஒழுங்கினை அறிந்து மிகப்பெருமை கொள்கின்றோம். கடந்த நூறு ஆண்டுகளில் சபையின் விரிவையும் விருத்தியையும் கண்டு கடவுளைத் துதிக்கிறோம். திருநெல்வேலி அத்தியட்சாதீன ஊழியத்தை ஒரே விசாரணைக்குள் கொண்டுவர எஸ் பி ஜி சங்கத்தார் மன மொத்து உழைத்துவருவது அறிந்து பெரிதும் பாராட்டுகிறோம். திருநெல்வேலி திருச்சபையின் சகல ஊழியங்களையும் முயற்சிகளையும் ஏக ஐக்கிய ஏற்பாட்டுக்குள் கொண்டுவர அத்தியட்சர் எடுக்கும் பிரயத்தினங்களுக்கு இரு சங்கப் பிரதிநிதிகளும் உற்சாகமாகக் கை கொடுத்து வருவதை நன்றியோடும் மகிழ்ச்சியோடும் அளித்து வருகிறோம். இந்திய குருக்கள் தொகை பெருகுவதையும், அவர்களின் ஆன்ம வாழ்க்கை வளர்வதையும், ஒவ்வொரு குரு சத்திலும் அதிக ஊக்கமாயும் உற்சாகமாயும் நடைபெறும் தயும் அறிந்து கடவுளைப் போற்றுகிறோம். சுயப்பெருக் கத்திலும், சுய ஆதரவிலும், சுய ஆளுகையிலும் இந்திய சபைகள் எடுத்து வரும் முயற்சிகள் எங்கள் மகிழ்வூட்டுகின்றன. இந்திய திருச்சபை பரிசுத்தமும் பரி பூர்ணமுமான சபையாக வளரவும் அதில் காணும் பலவீனங்கள் முற்றிலும் ஒழியவும் வேண்டுமென்று பிராத்திக்கிறோம். நூற்றாண்டு ஞாபகமாக, எங்களுக்குரிமைப்பட்ட ஆலயங்கள், குருகுடில்கள், இதர சொத்துக்கள் அனைத்தும் பின் காட்டிய நிபந் தனையில் நெல்லைத் திருச்சபைக்குக் கையளித்து விடுகிறோம். நெல்லைச் சபையானது தன்னை ஒரு பொக்கிஷ ஆளுகைச் சங்க மாக்கிச்சட்டத்தின் படி பதிவு செய்து கொள்ளவேண்டும். எந் நோக்கோடு மேற்கூறிய சொத்துக்கள் வாங்கப்பட்டு கையாளப் பட்டனவோ அந்நோக்கோடு அவை நிர்வகிக்கப்பட்டு செயல் படுத்துவதாக வாக்குறுதி அளிக்க வேண்டும். சென்னையின் சி எம் எஸ் ஜில்லா விசாரணை சங்கத்தாரை இந்த விஷயத்தைப் பூரண ஒழுங்குக்குக் கொண்டு வர உதவி செய்யக்கேட்கிறோம். சி எம் எஸ் சங்கத்தாரின் முதல் மிஷனெரியான கனம் ரேனியஸ் ஐயரவர்கள் 1820ம் ஆண்டு ஜூலை 7ம் நாள் பாளையங்கோட்டை வந்திறங்கினார். இந்நன்னாளை மக்கள் ஒரு ஸ்தோத்திர ஜெப நாளாகக் கொண்டாடினர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். விழாவன்று காலை 4 மணிக்கு 100 அதிர் வேட்டுகள் போடப்பட்டன. கால் மணி நேரத்திற்குக் கோவில் பள்ளிக்கூட மணிகள் ஒலிக்க மக்கள் நித்திரை விட்டெழுந்து ஆயத்தப்பட்டனர். 4 மணி முதல் 6மணி வரை பலரும் பாடிக் கொண்டு கிறிஸ்தவ மக்கள் வசிக்கும் இடங்களைச் சுற்றி வந்தனர்.








காலை 7.30 க்குப் பரி.நற்கருணை ஆராதனை ஆரம்பித்தது. 14 குருக்கள் பங்கெடுத்தனர். நூற்றாண்டு லித்தானியா வாசிக்கப்பட்டது. சுமார் 600 பேர் பரி.நற்கருணையில் பங்கெடுத்தனர் என்ற ஒரு கணக்குண்டு. கனம் ஆர்டில் ஐயர் செய்தி கொடுத்தனர். பின்னர் சிறுவர்களுக்கு ஆலயத்தில் ஓர் ஆராதனை நடைபெற்றது.

காலை 10-30 க்கு நூற்றாண்டு மண்டபத்தில் யாவரும் கூட, ராவ்சாகிப் A S அப்பாசாமி பெரியார் தலைமை தாங்க, மிஷனெரிமார் 15 பேர் மேடையில் அமர, பட்டதாரிகள் தம் பட்டத்து ஆடையோடு பவனிவந்து தம் ஆசனத்தில் அமரக் கூட்டம் ஆரம்பமானது. தாய்ச் சங்கத்தாருக்கு நன்றிக்கடன் செலுத்தக் கனம் M. ஆசீர்வாதம் ஐயரவர்கள் 145ம் சங்கீதம் வாசித்து ஜெபித்தனர். தலைவர் முன்னுரை வாசித்தார். கனம் மூர் ஐயாரவர்கள் மிஷனெரிமார் செய்த சேவையைப் பெரிதும் பாராட்டிப்பேசினார். அரசு சேப்ளனான கனம் ஹௌ (Hough) ஐயரவர்கள், ரேனியஸ், ஸ்மிட், பெற்றிற் ஆகிய குருக்களும் மகாகனம் சார்ஜென்ட் அத்தியட்சரும் பள்ளிக்கூடத்து மானேஜர்களான மிஷனெரிமார் செய்த ஊழியங்களையும் எடுத்துரைத்து ஆண்டவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கேட்டுக்கொண்டனர். பின்னர் கனம் ஊ ஹி தெய்வநாயகம் ஐயரவர்கள் இந்திய கிறிஸ்தவ ஊழியர்களான ஜாண் தேவ சகாயம், ஞானமுத்து, மதுரேந்திரம், முத்துசாமி வேத நாயகம், வீரபாகு முதலியவர்களின் ஊழியச் சிறப்பினை எடுத்துக்காட்டினர். திரு மூ.அன்புடையான் கடந்த நூறு ஆண்டுகளில் பிராந்திய கல்வி அபிவிருத்தியையும் சுவிசேஷ முயற்சிகளையும் எடுத்து சிலாகித்துப் பேசினார். சுவிசேஷ ஊழியத்தின் வளர்ச்சிகளைக் காட்ட இந்திய மிஷனெரி சங்கத்தை ஆதாரமாகக்கொண்டனர் கனம் மூர் ஐயர் தாய் சங்கக் காரியதரிசி கனம் பார்ட்ஸ்லே மூலமாய் வந்த வாழ்த்துத் தந்தியைத் தலைவரிடம் கொடுக்க அது, சபையாருக்கு வாசிக்கப்பட்டது. அது சங் 115, 12-14 வசனங்கள் அடங்கியதாகும். கனம் R U. ஆசீர்வாதம் ஐயரவர்கள் ஸ்தோத்திர ஜெபம் செய்த பின் காணிக்கை சேகரிக்கப்பட்டது. நூற்றாண்டு விழாக்குழுவினர் தாய்ச் சங்கத்திற்குத் தம் நன்றி கலந்த ஒரு வாழ்த்துச்செய்தி தந்தியைக் கனம் ஆர்டில் ஐயரவர்கள் மூலம் அனுப்பி வைத்தனர். கனம் ஆர்டில் ஐயர் ஆசீர்வாதம் கூறக்கூட்டம் இனிது கலைந்தது கூட்ட முடிவுக்குப் பின் திருத்துவ ஆலயத்திற்கு முன் மூன்று ஞாபகார்த்த மரங்கள் நாட்டப்பட்டன. அன்று மாலை 3 யானைகள், ஒரு ஒட்டகம், போலீஸ் பாண்ட் வாத்தியம் முன் செல்ல பெரியோரும் சிறியோரும் கொடி யேந்தி நகர் வலம் வந்தனர். இரவு 8 மணிக்கு 100 ஆண்டுகளில் நம் மத்தியில் பணிபுரிந்த மிஷனெரி மார்களின் படம் சரித்திரக் கோர்வையாக எடுத்துக்காட்டப்பட்டது.

விழாவிற்கு ஏறக்குறைய 20,000 மக்கள் பல பாகங்களிலும் மிருந்து கூடினர் பந்தல் இடம் கொள்ளவில்லை. இந்தியா, பர்மா, இலங்கை மாகாண திருச்சபையின் மேற்றிராணியார் பெப்ருவரி 21ம் நாள் வந்து இறங்கினர். புகைவண்டி நிலையத்தில் அவர் பெருமரியாதையுடன் வரவேற்கப்பட்டார். மகாகனம் V S. அசரியா அத்தியட்சர் 22ம் தேதி வர அவரும் உயரிய முறையில் வரவேற்கப்பட்டார். சென்னையில் சி எம் எஸ் சங்கக் காரியதரிசியாக இருந்த 50 ஆண்டுகள் நற்பணி ஆற்றி 83 வயது முடிந்த பெரியார் கனோன் செல் ஐயரவர்கள் வந்தார். தென் இந்தியாவின் இதர கிறிஸ்தவ சபைகளின் குருக்களும் சபைப் பிரதிநிதிகளும் பங்கெடுக்க வந்தனர். யாவருக்கும் கண்ய முறையில் வரவேற்பளிக்கப்பட்டது.

22 ம் தேதி மாலையில் ஆயத்த ஆராதனை நடந்தது. நெல்லை குருக்களிலே முதுமை கொண்ட கனம் D M பாக்கிய நாதன் ஐயர் ஆராதனை நடத்தினர். திருவிதாங்கூர் மகாகனம் கீல் அத்தியட்சர் பிரசங்கம் செய்தார். 23 ம் தேதி காலை 5.50 மணிக்குப் பரி. நற்கருணை ஆராதனை நூற்றாண்டு பந்தலில் நடைபெற்றது. இந்திய திருட்சபை அத்தியட்சர்களும், லூத்தரன் சபை அத்தியட்சர் ஒருவரும், ஐரோப்பிய, இந்திய குருக்கள் பலரும் நற்கருணை பறிமாறினர். பிரசிங்கித்தவர் மேற்றிராணியார். 5000 பேர் திருவிருந்தில்பங்குகொண்டனர். மத்தியானம் 12 மணிக்கு மேற்றிராணியாருக்குச் சமஸ்த திருநெல்வேலி அத்தியட்சாதீன சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. 4.30 மணிக்கு ஸ்தோத்திர ஆராதனை. அதில் பிரசங்கித்தவர் மகாகனம் தோர்ணக்கல் அத்தியட்சர் ஆவார். கடந்த ஒரு நூற்றாண்டில் நெல்லையில் நற்பணியாற்றிய ஐரோப்பிய. இந்திய

ஊழியரின் ஞாபகார்த்தமாகப் பளிங்குக்கல் சின்னம் ஒன்று மேற்றிராணியாரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. விஸ்வாசத்தோடே சாட்சி பகர்ந்தே என்றும் கீதம் பாடப்பட்டது. ஆராதனை முடிவில் தோத்திர காணிக்கை படைக்கப்பட்டது. சி எம் எஸ் சங்கத்தின் நெல்லை சொத்துக்கள் அனைத்தையும் நெல்லை அத்தியட்சாதீனத்திற்கு நன்கொடையாக அளிக்கும் பத்திரம் சென்னை சி எம் எஸ் பிரதிநிதியான கனம் பீச்சி ஐயரவர்களால் வாசித்து ஒப்படைக்கப்பட்டது. இரவு 9 மணிக்கு அத்தியட்சாதீனத்தில் பணியாற்றிய மிஷனெரிமார்களின் படங்கள் தீபஒளியில் காட்டப்பட்டு வாழ்க்கைக்குறிப்பு கூறப்பட்டது. பெப்ருவரி 24ம் நாள் காலை 5 மணிக்குத் திருத்துவ ஆலயத்தில் பரி. நற்கருணை ஆராதனை நடைபெற்றது. ஏறக்குறைய 2000 பேர் பங்கு பெற்றதாக ஒரு கணக்கு ஆராதனையில் அசரியா அத்தியட்சர் பிரசங்கித்தார். காலை 9 மணிக்குத் தாம்பரபரணி ஆற்றில் 400 பேருக்குப் பருவம் கடந்த ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது. ஆராதனையில் மகாகனம் அசரியா அத்தியட்சர் பிரசங்கித்தார். பிறமதத்தினர் இக்காட்சியை கண்டுமகிழ்ந்தனர். அன்றுபகல் 2 மணிக்கு திருநெல்வேலி சி எம் எஸ் கல்லூரியின் புதிய கட்டிடத்திற்கு மேற்றிராணியார் அடிக்கல் நாட்டினர். இதுவே பின் பாளையம்கோட்டைக்கு மாற்றப்பட்டது. 4 மணிக்கு வெளியில் இருந்துவந்து பிரதிநிதிகளுக்கென ஒரு கூட்டம் நடைபெற்றது இதில் நம் மாணவர்கள், நம்மில் கிறிஸ்து மார்க்கம் ஸ்தாபித்த வரலாற்றுகளையும், மிஷனெரிமார்களின் பணிகளையும் அவர்களது முறைகளையும் நாடக ரூபமாக நடத்திக்காட்டினர். இரவு 9 மணிக்கு தஞ்சை வாழ் ராவ்சாகீப் ஆபிரகாம் பண்டிதர் கதா காலக்ஷேபம் நடத்தினர்.

பெப்ருவரி 25 வெள்ளி காலை 7 மணிக்கு சி எம் எஸ் உயர் தரக்கல்விச்சாலையின் புதுக்கட்டிடத்திற்கு மகாகனம் மேற்றிராணியார் கல்நாட்டினர். இது 1928 இல் பரி யோவான் கல்லூரியோடு இணைக்கப்பட்டது. இரவு 1.30 மணிக்கு இதர சபைப் பிரதி நிதிகளுக்கென்று ஒரு கூட்டம் நடைபெற்றது. பலர் சொற்பொழிவு ஆற்றினர். பகல் 2 மணிக்கு இந்திய மிஷனெரி சங்க முதலாளி ராவ்சாகிப் (பின் திவான் பகதூர் ) பட்டம் பெற்ற A S அப்பாசாமி இந்திய மிஷனெரி சங்கத்தின் பேரால் வருகை தந்த மேற்றிராணியாருக்கு வந்தனோ பசாரம் செய்து கண்ணியப்படுத்தித் தேனீர் விருந்து கொடுத்தனர். சிறுவருக்கென பந்தய ஓட்டகங்கள் நடைபெற்றன. மாலை 7 மணிக்குப் போது வந்தனோபசாரக்கூட்டம். இதில் விழாவில் கலந்து கொள்ள வந்த பிரதி நிதிகளுக்கும், விழாக்காரியதரிசி கனம் G தேவதாசன் ஐயருக்கும், உதவி புரிந்த சாரணப் படைத்தலைவர் கனம் C G ஸ்றேப்ளி ஐயருக்கும் நன்றி உபசார மொழி கூறப்பட்டது. மேற்றிராணியாரின் ஆசீர்வாதத்தோடு கூட்டம் இனிது முடிவாயிற்று. விழா தற்போதுள்ள V O C மைதானத்தில் நடைபெற்றது. விழாவுக்குக் கனம் P S பீற்றர் ஐயர், கனம் D M ஞானசிகாமணி ஐயர் பாளையங்கோட்டை திரு.பொன்னுசாமி உபதேசியார் ஆகியோர் விழாக் கீர்த்தனைகள் இயற்றிக் கொடுத்தவர்கள் ஆவர்.

> **எங்கு கிறிஸ்தவன் வசிக்கின்றானோ அங்கே தொழுது கொள்ள தேவாலயம் இருக்க வேண்டும் – ரேனியஸின் கொள்கை**

# கல்லறை திருநாள்

● அருள்திரு. முனைவர். ச. ராஜசேகரன்



## முன்னுரை

ஆன்மிகப் பண்டிகை, சமயப் பண்டிகை, தேசிய பண்டிகை, பிராந்தியப் பண்டிகை, கலாச்சார பண்டிகை, குடும்பப் பண்டிகை மற்றும் தனிநபர் கொண்டாடும் பண்டிகை என பலவகைப் பண்டிகைகள் உள்ளன. இயேசு கிறிஸ்துவின் பிறந்தநாள் பண்டிகை, புதுவருட பண்டிகை, இயேசுவின் கடைசி போஜனப் பண்டிகை, சிலுவையில் அறையப்பட்ட நாள் பண்டிகை, உயிர்த்தெழுந்த நாள், பரமேரிய நாள், பரிசுத்த ஆவியானவர் பொழிந்தருளப்பட்ட பண்டிகை, திருச்சபை நிறுவப்பட்ட நாள் பண்டிகை, அறுப்பின் பண்டிகை, திருச்சபை தலைவரின் திருநிலைப்படுத்தப்பட்ட நாள் பண்டிகை, பரிசுத்தவான்களை நினைவுகூறும் பண்டிகை, பிறந்தநாள், திருமணநாள் மற்றும் அன்புக்குரியவர்களின் மரண நாளை நினைகூறும் பண்டிகை என பல்வேறு பண்டிகைகளை கிறிஸ்தவர்கள் கொண்டாடுகிறார்கள். பொதுவாகவே பண்டிகைகள் கடந்தகால நிகழ்வை நிகழ்காலத்தில் நன்றியுடன் நினைவுகூறுவதாகவே இருக்கும். (யாத் 12.14)

பண்டிகைகள் நம்முடைய ஆன்மிக மற்றும் சமூக நலனை மேம்படுத்துகிறவையாக இருக்கும். அத்துடன் கடவுள் மற்றும் சகமனிதர்களுடன் நல்லுறவை வலுப்படுத்துகிற நோக்கம் கொண்டது. பண்டிகைகளை கொண்டாடவும் நினைவுகூறவும் கடவுள் அறிவுறுத்துகிறார். ஆனாலும் பண்டிகைகளை எப்படி

கொண்டாட வேண்டும் என்பதில் கடவுள் அக்கறையுள்ளவராக இருக்கிறார். அவரை பெருமைப்படுத்தும் பண்டிகையாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய சித்தம் மாறாக நம் சாதி, செல்வம் மற்றும் சாதனைகளை பெருமையாகப் பேசுவதை கடவுள் அருவருக்கிறார். அப்படிப்பட்ட பண்டிகைகளை கடவுள் எனக்கு வேண்டாம் என்கிறார். (ஏசா1.14) பண்டிகைகளின் பொருள் புரியாமல் கொண்டாடப்படுவதற்கு காரணம் அதன் பொருளை மறந்து வெளிப்புறமான சடங்குகளுக்கு முக்கியத்துவம் கொடுத்ததை வேதவரலாற்று காலத்திலேயே காணலாம். அதனால்தான் பெற்றோர்கள் மற்றும் பெரியவர்கள் அதனை பிள்ளைகளுக்கு சொல்லித்தரவேண்டும் என்று கடவுள் போதித்தார். சகலஆத்துமாக்களின் தினத்தை நினைவுகூறும் கல்லறை திருநாளை நினைவுகூறும் பண்டிகையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

## கல்லறை திருநாள் – காலவரலாறு

கல்லறை திருநாள் ரோமகத்தோலிக்க திருச்சபையின் ஒரு பண்டிகையாக இருந்தாலும், மரித்தவர்கள் தங்கள் குடும்பத்துடன் வந்து உணவருந்துவார்கள் என்ற நம்பிக்கையுடைய ஒரு அந்நிய சமய பண்டிகையாகவே காலகாலமாக இருந்துவந்தது என்று வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். கி.பி. 7ம் நூற்றாண்டில், இன்றைக்கு ஸ்பெயின் நாடாக இருக்கும் பகுதியில், பெந்தேகோஸ்தே நாளைத் தொடர்ந்துவரும் திங்கள் கிழமை வியாதியஸ்தர்களை நினைவுகூறும் நாளாக அந்நாட்களில் வாழ்ந்த கிறிஸ்தவ துறவிகள் அனுசரிக்க தீர்மானித்தார்கள். தூய ஒடிலோ நினைவாக சகல பரிசுத்தவான்களின் நினைவுநாளைத் தொடர்ந்து சகல ஆத்துமாக்களுக்காகவும் ஜெபித்து பாடல்கள்பாடி, நினைவுகூறும்படி இந்தநாளை நியமித்தார்கள்.

கல்லறை திருநாள் ரோம கத்தோலிக்க திருச்சபையும் அதனை ஆதாரமாகக்கொண்ட சீர்த்திருத்த திருச்சபைகளும் கொண்டாடும் மேற்கத்திய கிறிஸ்தவ பண்டிகை, கிழக்கத்திய திருச்சபைகள் பெந்தேகோஸ்தே திருநாளுக்கு பின்வரும் முதல் வெள்ளிக்கிழமையில் சகல பரிசுத்தவான்களின் திருநாளையும் அதனைத் தொடர்ந்தவரும் ஞாயிறன்று சகல ஆத்துமாக்களின் தினமாக கொண்டாடுகிறது. சீர்த்திருத்த சபைகள் கல்லறை திருநாள் அனுசரிப்பிலும் சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. கல்லறை திருநாள் அல்லது சகல ஆத்துமாக்களின் தினம், ஞானஸ்நானம் பெற்று மரித்த கிறிஸ்தவர்களை நினைத்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 2ம் தேதி கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது. அதற்கு முந்தின நாளை (நவம்பர் 1ம் தேதி) சகல பரிசுத்தவான்களின் தினமாக நினைவுகூறப்படுகிறது.



## கல்லறை திருநாள் – காரணம்

பரிசுத்தவான்கள் பரலோகத்தில் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில், அந்நாளில் கடவுளுக்காக வாழ்ந்து நற்செய்தி பணிக்காக உயிர்நீத்த அவர்களை நினைவுகூர்ந்து, அவர்களுக்காக கடவுளுக்கு நன்றி சொல்லவும், அவர்களுடைய வெற்றி வாழ்வின் இரகசியத்தை ஆராய்ந்து அதற்கு ஒப்புக்கொடுப்பதும் இந்த நல்லநாளின் நிகழ்வாகும். அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்சொல்வதும் இந்நாளின் சிறப்பம்சமாகும். பரிசுத்தவான்களிடம் வேண்டிக்கொள்ளும் தவறான நம்பிக்கையும் முறையும் இதனுடன் இருப்பது இயல்பாகிவிட்டது. பரிசுத்தவான்களின் மரணத்தை நினைவுகூர்ந்த அடுத்தநாளில், கிறிஸ்தவர்களாக மரித்தவர்களை அனைத்து கிறிஸ்தவர்களும் ஒரேநாளில் நினைவுகூறும் பண்டிகையே கல்லறை திருநாள்.

மரித்தவர்களை இழந்தவர்களின் துக்கம் நிவர்த்தியாக கல்லறை திருநாள் உதவுகிறது. இன்பத்தையும் துன்பத்தையும் பகிர்ந்துகொண்டும், இன்பத்தில் சிரித்தும், துன்பத்தில் அழுதும் அதை முறையாக கையாளும் போது அதன் பொருட்டு நல்விளைவு ஏற்படும். அதனால்தான் பவுல் சந்தோஷப்படுகிறவர்களோடு சந்தோஷப்படுங்கள், துக்கப்படுகிறவர்களோடு துக்கப்படுங்கள் என்கிறார். (ரோமர் 12.15) கிறிஸ்தவர்களாக மரித்தவர்களின் மரண நாளில் அவர்களை அவர்கள் குடும்பத்தார் மட்டும் நினைவுகூறுகிறார்கள் ஆனால் சகல ஆத்துமாக்களின் தினத்தில் திருச்சபையாக அவர்களை நினைவுகூறுகிறார்கள்.

## கல்லறை திருநாள் – கேள்வி

பொதுவாக மரித்தவர்களின் உடலை எரித்து சாம்பலை தண்ணீரில் கலக்குவதும், புதைத்து மண்ணோடு மண்ணாக்குகிறார்கள். கிறிஸ்தவர்கள் மரித்தவர்களின் உடலை புதைப்பதற்கு காரணம் இயேசு புதைக்கப்பட்டார், அவர் அக்கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார். அதைப் போலவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பார்கள் என்னும் நம்பிக்கையில் அவர்களைப் புதைத்து அவ்விடத்தை அவர்களின் ஓய்விடமாக அல்லது உறைவிடமாக கருதுகிறார்கள். (1 கொரி 15.52, 1 தெச 4.16) புதைக்காமல் எரித்தால் அவர்களுக்கு உயிர்த்தெழுதல் இருக்காதா? என்னும் கேள்வியும் எழுகிறது. அநேக பரிசுத்தவான்கள் எரிக்கப்பட்டிருக்கிறார்கள், மிருகங்களுக்கு இறையாகியிருக்கிறார்கள், அவர்களுக்கும் உயிர்த்தெழுதல் உண்டு என்றே வேதம் சொல்கிறது. மரித்த உடலுக்கு எந்த முறையில் மண்ணோடு மண்ணாக்குகிறோம் என்பதல்ல முக்கியம் மாறாக அவர்களை நினைவுகூறும் வகையில் அவர்களின் அடையாளத்தை இந்த உலகில் ஏற்படுத்தவே கல்லறையில் அடக்கம் செய்கிறோம். எரிக்கப்பட்டவர்கள் அல்லது மிருகங்களுக்கு இறையானவர்களுக்கும் நினைவுகூடம் எழுப்பி அவர்களின் மரண நாளில் நினைவுகூறுகிறார்கள்.

மரணம் வாழ்வின் முடிவல்ல மாறாக அதுவும் ஒரு அங்கம் என்பதை அறிவுறுத்தவும் உயிர்த்தெழுதலுக்கான விசுவாசத்தை அறிக்கை செய்யும் திருநாளாகவும் இக்கல்லறை திருநாள் அமைகிறது. இந்நாளில் கிறிஸ்தவர்கள் கல்லறைகளை சுத்தம் செய்து, விளக்கேற்றி, மாலை அணிவித்து, அக்கல்லறையின் அருகில் குடும்பத்தினர் கூடி, மரித்தவர்களின் நல்ல காரியங்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக கடவுளுக்கு நன்றி சொல்வதுடன் அவரை அந்நாளில் சிறப்பாக நினைத்து மகிழ்வார்கள் அல்லது துக்கப்படுவார்கள். கல்லறைக்கு செல்வதால் கல்லறை

கோவிலாகுமா? அங்கிருந்து ஜெபிப்பதால் அது விக்கிரக ஆராதனையாகாதா? என்ற கேள்விக்கு இல்லை என்பதே பதில்! மரித்தவர்களின் ஆத்தும் விடுதலைக்காக யாரும் ஜெபிக்கமுடியாது. அது இவ்வுலகைவிட்டு கடந்து செல்வதற்கு முன்பு நிகழ்ந்திருக்கவேண்டியது. அவர்கள் கடவுளும் கிடையாது. ஆகவே அவர்களிடம் நாம் ஜெபிப்பதில்லை. நாம் அவர்களை நினைவுகூறுகிறோம் என்பதை மரித்தவர்கள் பார்ப்பதுமில்லை, கேட்பதுமில்லை, அறிவதுமில்லை, அவர்களோடு நமக்கு எந்த தொடர்பும் இல்லை. (பிர 9.5) அவர்களும் நம்முடன் எந்த தொடர்பும் வைத்துக்கொள்ளமுடியாது. அவர்களை நினைவுகூர்வதால் அவர்கள் நம்முடன் நமது நினைவில் வாழ்கிறார்கள்.

மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெற்ற நம்பிக்கையும் வழக்கமும் பவுல் காலத்தில் இருந்திருக்கிறது. அதனால் தான் "மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்?" என்று பவுல் கேட்கிறார் (1கொரி15.29) மரித்தவர்களுக்காக அவர்களுடைய உறவினர்கள் நண்பர்கள் செய்யும் பல்வேறு சடங்குகள் இன்றும் பெரிய கேள்விக்குள்ளாகவே இருக்கிறது. மரித்தவர்கள் கனவில் வருவதும், நாம் வைக்கும் உணவுகளை சாப்பிடுகிறார்கள் அத்துடன் அவர்கள் நட்சத்திரங்களாக மாறுகிறார்கள், வானத்திலிருந்து அல்லது கடவுளிடமிருந்து நம்மை கண்காணிக்கிறார்கள், நமக்காக அவர்கள் கடவுளிடம் வேண்டிக்கொள்கிறார்கள் அத்துடன் அவர்கள் பரலோகத்தில் ஆலோசனை சங்கத்தில் இடம் பெறுகிறார்கள் என்றும், ஆபத்து நேரத்தில் அவர்கள் பெயரை சொல்லிக்கூப்பிட்டால் வந்து உதவுகிறார்கள், அவர்கள் வீட்டில் யாருடைய வயிற்றிலாது மீண்டும் பிறக்கிறார்கள் என்றும், அங்கும் இங்கும் அலைந்து பலரை ஆட்க்கொள்கிறார்கள் என்னும் பல்வேறு நம்பிக்கைகளுக்கும் அவைகள் சரிதானா என்று கேட்கும் கேள்விகளுக்கு நம்மிடம் அறிவியில் பூர்வ ஆணித்தரமான பதில் இல்லை.

## கல்லறை திருநாள் – கருத்து


மரித்தவர்களின் நலனுக்காக அல்ல நம் நன்மைக்காவே இந்த கல்லறை திருநாளைக் கொண்டாடுகிறோம். ஆத்துமாக்கள் இருக்கும் அனைவரும் கொண்டாடவேண்டிய பண்டிகை "சகல ஆத்துமாக்கள் தினம்" அல்லது "கல்லறை திருநாள்". திருமண விழாவிற்கு அல்லது விருந்து வீட்டிற்குப் போவதைவிட துக்க வீட்டிற்கு போவதால் உயிரோடிருக்கிறவன், மனுஷனின் முடிவைப்பற்றிசிந்திப்பான்என்றுசாலாமோன் கூறுகிறான் (பிர 7.2) இப்போதிருக்கிற கஷ்டத்தை அனுபவிக்காமல் முன்னமே மரித்தவர்கள் பாக்கியவானகள் என்றும் சாலமோன் கூறுகிறான் (பிர 4.2) கல்லறை மூலம் இயேசு நமக்கு கற்றுக்கொடுக்கிற பாடம் மிகவும் பெரிது "வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை போன்று, புறம்பே அலங்காரமாய், உள்ளே சகல அசுத்தம் மற்றும் துற்நாற்றம் வீசும் மனிதர்களாய் வேஷம் போடுகிறீகளே!" என்கிறார் (மத் 23.27) கல்யாண திருநாள் படிப்பிக்கும் பாடத்தைவிட கல்லறை திருநாள் படிப்பிக்கும் பாடம் பெரிது.

## முடிவுரை

பண்டிகைகள் எதை உணர்த்துகிறதோ அதனை உணர்ந்து செய்தால் பண்டிகைகள் மனிதர்களின் ஆத்துமாவுக்கும், உடலுக்கும் உயிருக்கும் நலன் பயக்கும். இல்லையேல் அதே பண்டிகையினால் கடவுளின் கோபத்திற்கு ஆளாகி வேதனையும் துன்பமும் ஏற்படும். இயேசு கிறிஸ்து மரித்தவர்களையும் உயிரோடிருக்கிறவர்களையும் நியாந்தீர்க்கிறார். அவருடைய பிரசன்னம் நம்முடனும் நமக்கு முன்பாக மரித்தவர்களுடனும் இருக்கிறது. ஆகவே நமக்கு முன்பாக மரித்தவர்கள் நமக்கு ஒரு நல்ல அல்லது கெட்ட முன்உதாரணமாக இருக்கிறார்கள். அதன்படி நாம் நம்மை நிதானித்துக்கொள்ளவும், மாற்றிக்கொள்ளவும் சகல ஆத்துமாக்களின் தினமான கல்லறை திருநாள் அமைந்திருக்கிறது. அன்று கல்லறைக்கு சென்று அதனை சுத்தம் செய்து, அதற்கு மாலை அணிவித்து, தூபம் காட்டுகிறோமோ இல்லையோ அன்று நம்மை விசேஷமாக மரணத்திற்கு பங்காளிகள் என்னும் உண்மையை நிதானித்து, அதற்கு அதிகாரியான இயேசுவிடம் ஒப்புக்கொடுத்தால் நாம் சகல ஆத்துமாக்களின் தினத்தில் அல்ல. நமது தலைமுறைகளால் அதற்கு முந்தின நாளான சகல பரிசுத்தவான்கள் நாளில் நினைவுகூறப்படுகிற பரிசுத்தவான்களைப் போல மாறுவோம். கற்றவனைவிட கல்லறை கற்பிக்கும் கல்வி பெரிது.


## குழந்தைகளுக்கான பரிசு போட்டி பரிசு யாருக்கு?

**நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயரின் கால்கள் பதிந்து இருநூற்றாண்டுகள் ஆகின்றது நிறைவு விழாவை கொண்டாடும் விதமாக அனைத்து திருச்சபையை சார்ந்த குழந்தைகளுக்கான வீடியோ பேச்சு போட்டி!**
**உங்க வீட்டில் 8 ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகள் இருக்கா ?**
**அவர்கள் நெல்லை அப்போஸ்தலர் ரேனியஸ் ஐயர் வரலாற்றை 5 முதல் 10 நிமிடங்கள் வரை பேசி வீடியோவாக எடுத்து எங்களுக்கு அனுப்புங்கள் சிறந்த பேச்சாளர்களுக்கு வயது அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும். மற்றவர்களுக்கு ஆறுதல் பரிசும் கொடுக்கப்படும்.**



1. பரிசுகள் முறையே 1000,750,500 ரூபாய்
2. வீடியோ 5 நிமிடம் முதல் 10 நிமிடம் வரை
3. வீடியோவை (edit) திருத்தாமல் அனுப்ப வேண்டும்.
4. குழந்தை பெயர் , முகவரி மற்றும் தொடர்பு எண்ணுடன் அனுப்ப வேண்டும்.
5. வீடியோவை வாட்ஸ் ஆப் அல்லது மின்னஞ்சல் முகவரிக்கு 2020 ஜுலை 25 ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

**வீடியோ அனுப்பவேண்டிய மின்னஞ்சல் மற்றும் வாட்சப் எண்**

+91 91767 80001
christianhistorical@gmail.com

# வளர்ந்தே பெருகுக என்றே என்ற பாடல் இயற்றிய ஆசிரியர் வரலாறு

மெ. தாமஸ் தங்கராஜ் ஆசிரியர் குறிப்பு

● Rex

முனைவர் அருள்திரு . மெ. தாமஸ் தங்கராஜ் (1942) அவர்கள் தற்போதைய தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்தை சார்ந்த, அவருடைய தாத்தா அருள்திரு.ப. அபிஷேகம் ஆவார். இவருடைய தந்தை அருள்திரு .ஒய்.மனுவேல் செராம்பூரிலும், பெங்களூரிலும் இறையியல் பயின்று , பின்னர் மூன்றாண்டுகள் சாத்தான்குளத்தில் குருவானவராகவும் பின்னர் 17 வருடங்கள் மதுரை அரசரடியில் இறையியல் கல்லூரியில் பேராசிரியராயுமிருந்து, பின்னர் 20 வருடங்கள் அமெரிக்க கல்லூரி பேராசிரியராயுமிருந்து , திருநெல்வேலியில் ஓய்வுற்றிருக்கிறார்.

இவருடைய குடும்பமே இசையார்வமுடையது. இவர் ஏறக்குறைய 500 பாடல்கள் படைத்துள்ளார்.
தமிழிலும், ஆங்கிலத்திலும் 7 நூற்கள் எழுதியுள்ளார். அருளுரையாளர். வயலின் வாசித்து காலட்சேபம் செய்பவர். இவர் CLS விரிவாக்க குழுவில் பணியாற்றியவர்.

1. வளர்ந்தே பெருகுக என்றே, உளம்
மகிழ்ந்தே புகழ்ந்திட வாரீர்
தளர்ந்தே சோர்வுறும் கால்களே, பலம்
அடைந்தே நடந்திட வாரீர்.
பெருகுவோம், வளர்ந்து
பெருகுவோம், தேவன்
அருளும் ஆவியின்
அருமையாம் ஒளியில்,வளர்ந்தே பெருகுவோம்



2. இரு நூறாண்டுகள் மேலாய், நெல்லைத்
திருச்சபை வளர்ந்திட நேர்ந்தார்
வரும்பல ஆண்டுகள் எல்லாம், இன்னும்
பெருகிட அருள்வரம் ஈவார்.

3. பிரிவினை எழுந்திடும் நேரம், நம்மைக்
கரிசனையோடவர் இணைத்தார்
உரிமையாய் ஒருமையில் வளர,அவர்
பரிவுடன் தினம் நடத்திடுவார்.

4. தூய்மையில் தவறிய வேளை, நம்மைத்
தூயவர் தூக்கியே எடுத்தார்
தாய்மையின் கரம் கொண்டு மேலும், நம்மைத்
தாங்கியே தினம் அணைத்திடுவார்.

5. ஒளியென உலகினில் வந்தார், நம்மை
ஒளியென விளங்கிட அழைத்தார்
ஒளிதரும் தீபங்களாக, என்றும்
ஒளிர்ந்திட ஓடியே வாரீர்.

**கடவுள் என் இருதயத்தைத் திறந்தார். அவரை துதிக்க என் வாயைத் திறந்தேன்.**

H. A. கிருஷ்ணபிள்ளை

200
YEARS

# சமரசம் செய்யாத சபை

● அருள்திரு. முனைவர். ச. ராஜசேகரன்

இஸ்ரவேல் மக்கள் கடவுளுக்கு இணையாக சட்டத்தை ஏற்றிருந்தார்கள். பத்து கட்டளைகளை எங்கும் சுமந்துசென்றார்கள். அது அவர்களுடன் இருக்கும் போது கடவுளே அவர்களுடன் இருப்பதாக நினைத்தார்கள். சட்டத்தை மீறுவது பாவம் என்பதே அவர்களின் அடிப்படை விசுவாசமாக இருந்தது. நியாயப்பிரமாணம் சொல்வதை செய்யவேண்டும் என்பதற்காக உயிரை கொடுக்கவும் எடுக்கவும் தயங்காதவர்களாக இருந்தார்கள். ஒரு கட்டத்தில் கடவுளைவிட சட்டம் அவர்களுக்கு பெரிதாகி அதுவே விக்கிரகமாக மாறியது. சட்டத்திற்கு அப்பாற்பட்டவர் கடவுள் என்பதை மறந்தார்கள். சட்டங்களைக் கொடுத்த கடவுள் அதை மீறவும், மாற்றவும் அதிகாரம் பெற்றவர் என்பதை மறந்து, சட்டத்தையே கடவுளாக ஏற்றனர். அதனால்தான் இயேசு நியாயப்பிரமாணங்களை நிறைவேற்ற வந்தேன் என்றார் (மத்:5.17). நியாயப்பிரமாணத்தின்படி பலுதற்ற பலியாக இயேசு தன்னையே பலியாக்கினார். மரணம் அவரை அடக்கிவைக்கமுடியாது என்பதை நிருபிக்கவே உயிர்த்தெழுந்தார். ஆனாலும் அவரை நம்பாத பெருங்கூட்டத்தாராக யூதர்கள் இருந்தார்கள்.
லூக்கா நற்செய்தியில் அடிக்கடி லூக்கா மற்றும் இயேசு அவரை நியாயப்பிரமாணத்தின்படி என்று தனது செயல்பாடுகளை உறுதிபட கூறுகிறார் (லூக்கா:2.22-39, 24.44). பிலிப்பு நாத்தான்வேலிடம், நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே! என்றான் (யோவா: 1.45). யோவான் நற்செய்தி நூலில் 7,8ம் அதிகாரங்களில் யூதர்கள் நியாயப்பிரமாணத்தை இயேசுவுக்கு எதிராக மேற்கோள் காட்டி குற்றஞ்சாட்டுகிறார்கள். அவைகளுக்கு அவர் தகுந்த பதிலைத் தந்து அவர் நியாயப்பிரமாணங்களுக்கு எதிரி அல்ல என்பதை சொல்கிறார். நியாயப்பிரமாணங்களின் வழியே இயேசுவை யெகோவா கடவுள் என்று தெளிவுப்படுத்தி காண்பித்தும் (அப்:13.39) பவுல் தன்னை ஒரு பரிசேயன் என்றும் நியாயப்பிரமாணத்தின்படி குற்றஞ்சாட்டப்படாதவன் (பிலி:3.5-

6) என்றும் அறிமுகப்படுத்தி அந்த நியாயப்பிரமாணமே, இயேசுவை மனித தெய்வம் என்று சொல்லி நம்பவைக்க முற்படுகிறான் . அநேகம் பேர் அவன் தங்கியிருந்த வீட்டிற்கு வந்தார்கள். அவன் காலமே தொடங்கிச் சாயங்காலமட்டும் மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் இருந்து இயேசுவுக்கடுத்த விசேஷங்களை அவர்களுக்குப் போதித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துச் சாட்சிகொடுத்து விஸ்தரித்துப் பேசினான் (அப்: 28.23).

யூதர்கள் மதம்மாறி ஞானஸ்நானம் எடுத்த புறஜாதிகளை அப்படியே ஏற்க மனதில்லாமல் அவர்கள் விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் என்ற அவர்களுக்குரிய சட்டத்தை இவர்கள் மேல் விதித்தார்கள். ஆனாலும் யாக்கோபு போன்ற யூத கிறிஸ்தவர்கள் நாமே சுமக்கமுடியாத சட்டங்களைஅவர்கள்மேல்சுமத்தவேண்டாம் என்று விருத்தசேதனத்திற்கு விலக்கு அளித்தார்கள். அதை எத்தனை யூதர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பது கேள்விக்குறி! ஆனாலும் புறஜாதிகள் அறிந்திராத பலியிடும் சட்டத்தையும், அவர்கள் உணவுக்காக எதையும் சாப்பிடும் நெருங்குண்டு செத்த மாமிசத்தை சாப்பிடக்கூடாது என்று சட்டம் விதித்தனர் (அப்:15.28) வயிற்றுக்குள் போவது ஒன்றும் நம்மை தீட்டுப்படுத்தாது, உள்ளிருந்து வெளியேறுபவைகள்தான் நம்மை தீட்டுப்படுத்தும் என்று இயேசு கூறினார் (மத்:15:11,18,20). உண்ணும் உணவுப்பற்றி யூதர்களுக்குள்ளே பெரும் சர்ச்சை உண்டாயிருக்கக்கூடும் அதனால்தான் பவுல் உணவுபற்றி ரோமருக்கு எழுதிய நிருபத்தில் “ நீ ஏற்காத உணவை உண்ணுகிற உன் சகோதரனை அற்பமாய் நினைக்காதே” (ரோமர்:14.2,3) என்று அறிவுரை வழங்குகிறான். இந்தியாவில் இன்றும் மேற்கத்திய வழியில் பின்பற்றுகிற கிறிஸ்தவர்களின் உணவுப்பழக்கமே பெரும்பாண்மையான புறமதத்தினர் கிறிஸ்துவை விசுவாசித்தாலும் கிறிஸ்தவர்கள் என்று சொல்வதற்கு தயங்குகிறார்கள். இந்த உணவுப்பிரச்சனையால் தான் பவுல் பேதுருவை மாய்மாலக்காரன் என்றும் அதனால் பெலவீனமானவர்கள் இழுப்புண்டுபோகிறார்கள் என்றும் கடுமையாகவும் நேரடியாகவும் விமர்சிக்கிறான் (கலா:2.11-21). மனிதனுக்குத்தான் உணவு உணவுக்காக மனிதன் அல்ல (மத்:12.3-4).



ஆவியாக இருந்த கடவுளே அவருடைய சட்டத்தை சமரசம் செய்து மனிதனாகினார். மத்தேயு:5.21-48 வரை கொலை செய்யக்கூடாது என்ற பிரமாணத்தை நியாயமில்லாமல் கோபித்துகொள்வதும் மூடன் என்றும் வீணன் என்று சொல்வதும் கொலைக்கு சமம் என்கிறார். காணிக்கை கொடுக்கும் போது ஏற்கனவே உன் சகோதரன் உன்குறைகளைப்பற்றி உன்னிடம் சொல்லியும் சரிசெய்யாத விஷயம் உனக்கு நினைவு வந்தால், உடனே போய் நல்மனம் பொருந்தி பின்பு உன் காணிக்கையை செலுத்து என்று காணிக்கையை விட சகோதர சிநேகமே முக்கியம் என்கிறார். ஒருவரை இச்சையோடு பார்ப்பதே விபச்சாரம் என்கிறார். உன் மனைவியை விவாகரத்து செய்யலாம் என்கிற சட்டத்தை மாற்றி விபச்சாரத்தில் கையும் களவுமாய் பிடிபட்டால் மட்டும் அதுவும் கட்டாயமாக அல்ல என்று விவாகரத்தை அனுமதிக்கிறார். பொய்யாய் சத்தியம் செய்யக்கூடாது என்பதைவிட உண்மையை உண்மையாகவும் இல்லாததை இல்லாததென்றும் சொல்லுங்கள். அதற்கு மிஞ்சியது ஏதும் இல்லை என்கிறார். கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்பதைவிட எல்லையின்றி மன்னியுங்கள். பாதி கேட்டால் முழுவதையும் கொடுங்கள். இருக்கும் போது கேட்டால் இல்லை என்று சொல்லாதீர்கள். பகைஞர்களையும் நேசியுங்கள். சபிக்கிறவர்களை வாழ்த்துங்கள் என்று ஏற்கனவே அவரே சொன்ன பிரமாணங்களை அவரே மாற்றியமைக்கிறார். ஓய்வுநாள் மனிதனுக்காக அல்ல, மனிதனுக்காகவே ஓய்வுநாள் என்றும், கடவுள் ஓய்வுநாளுக்கும் கடவுளாயிருக்கிறார் என்றும் அதன் விதிமுறைகளை மாற்றியமைக்கிறார் (மத்:12.5-12).

எல்லாரையும் மாற்றியமைக்க எல்லாமுமாய் மாறிக்கொள்ளும் கிருபையும், எல்லாரையும் மாற்றியமைக்கு எதற்காகவும் மாறாத சத்தியமாகவும் இயேசு இருக்கிறார் என்று (யோவான்:1.14) சொல்கிறான். கடவுளே தன் பிரமாணங்களை மாற்றும் போது மாறாமல் இருந்தால் கொடுத்த சட்டத்தை அறிந்த அளவு, சட்டத்தைக் கொடுத்தவரை அறியவில்லை என்றே பொருள். அது கடவுளை வேதனைப்படுத்துகிற விஷயம். என்னைப் புரிந்துகொள்ளவில்லையே என்று கடவுள் ஆவியாக இருந்தபோதும் (ஏசா:1.3 மாடு தன் எஜமானையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும். இஸ்ரவேலோ அறிவில்லாமலும், என் ஜனம் உணர்வில்லாமலும் இருக்கிறது என்கிறார்) சரீரத்தில் இருந்தபோதும் (யோவான்:14.9.10) அதற்கு இயேசு, பிலிப்புவே, இவ்வளவுகாலம் நான் உங்களுடனேகூட இருந்தும் நீ என்னை அறியவில்லையா, என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான், அப்படியிருக்க, பிதாவை எங்களுக்குக் காண்பியும் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்! நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா?) வேதனைப்பட்டார். யூதர்கள் கடவுளின் தொடர் வெளிப்பாட்டை (progressive revelation) அறியவில்லை. அதனால்தான் இயற்கையின் மாற்றங்களை நிதானிக்க தெரிந்த உங்களுக்கு கடவுள் தன்னை பல்வேறு நிலைகளில் வெளிப்படுத்தும் காலங்களை நிதானிக்காமல் போவதென்ன? (லூக்கா:12.54-57) என்று கேட்கிறார். எக்காலத்திற்கும் உரிய

கடவுள் காலங்களை மாற்றியமைப்பதுடன், காலம் நிறைவேறும்போது அவரும் மாறிக்கொண்டிருக்கிறார். “காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்” (கலா:4.5)என்பதை யூதர்கள் அறியாததால் சட்டத்தின் மாற்றத்திற்கு அவர்கள் சமரசம் செய்துகொள்ளவில்லை.

தொடரும் ...

**சென்னை வேதாகம சங்கம் 1817, நவம்பர் 5 இல் கனம் ரேனியஸ் ஐயரின் பெரு முயற்சியால் துவங்கப்பட்டது.**

# ஸ்தோத்திர பண்டிகைகள் ஆரம்பமான வரலாறு

திரு.ஜான் ஞானராஜ்

## ஸ்தோத்திர பண்டிகைகளின் முன்னோடி – மாம்பழச் சங்கம்

தற்போதைய திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மாவட்டங்கள் முற்காலத்தில் ஒருங்கிணைந்த திருநெல்வேலி மாவட்டம் ஆக செயல்பட்டது. அதேபோன்று இந்த நான்கு மாவட்டங்களும் ஒருங்கிணைந்த திருநெல்வேலி திருமண்டலம் ஆகவும் செயல்பட்டது.திருமண்டல சி.எம்.எஸ் வட்டாரங்களில் சுமார் 130 ஆண்டுகளுக்கு முன்பாக ஸ்தோத்திர பண்டிகைகள் தொடங்கப்பட்டது. அந்த ஸ்தோத்திர பண்டிகைகளுக்கு முன்னோடியாக திகழ்வது மாம்பழச்சங்க பண்டிகையாகும்.

### மாம்பழச் சங்கம் - பெயர் காரணம்

திருநெல்வேலி திருமண்டலம் அளவில் சி.எம்.எஸ் மிஷனரிமார்களும் சபை ஊழியர்களும் சபை மக்களும் குடும்பமாக ஒருங்கிணைந்து ஆண்டுதோறும் ஆனி மாதத்தில் கொண்டாடிய பண்டிகை மாம்பழச்சங்கப் பண்டிகை. இந்த பண்டிகை காலத்தில் மாம்பழ சீசன் இருந்தமையால் பண்டிகை நடைபெற்ற அலங்கார பந்தலுக்கு வெளியே மாம்பழங்கள் விற்கப்படுகிற கடைகள் அதிகமாக காணப்பட்டதால் இப்பண்டிகை மாம்பழச்சங்கம் என அக்காலத்தில் அழைக்கப்பட்டது. அதே நேரத்தில் இந்த பண்டிகை நேரத்தில் பெண், மாப்பிள்ளை பார்க்கிற சம்பவங்களும் நடைபெற்றதால் மாப்பிள்ளை பண்டிகை என்றும் அழைத்தனர்.

### நிதி சேகரிப்புப் பண்டிகை

திருநெல்வேலி திருமண்டல சி.எம்.எஸ் உபதேசிமார்கள், உபாத்தியாயர்கள் குடும்ப கைம்பெண் நிதிசேகரிப்புக்காக 09.07.1834 அன்று பாளையங்கோட்டையில் வைத்து இப்பண்டிகை தலைமை மிஷனரி அருள்திரு.ரேனியஸ் ஐயரவர்களால் தொடங்கப்பட்டது. இந்தக் கைம்பெண் நிதி அமைப்பு முறைக்கு அடித்தளமிட்டவர் டோனாவூர் தலைமை உபதேசியார் திரு.ரத்தினம் ஆவார். அலங்கார பந்தலில் திருச்சபை மக்கள் அனைவரும் ஒன்று கூடுவதும் அனைவரும் ஒன்றுகூடி காலையில் ஆராதனை, மதியம் ஸ்தோத்திர ஜெப பண்டிகை ஆராதனை அதன்பின் முன்சென்று காணிக்கை படைக்கும் வழக்கம் அதில் காணப்பட்டது. பண்டிகைக்கு வருகிறவர்கள் ஏழைகளுக்கு பணமாக அரிசியாக உதவிகளையும் செய்தார்கள். ஸ்தோத்திர பண்டிகைகளிலும் மதிய வேளையில் ஸ்தோத்திர ஜெப ஆராதனை மற்றும் காணிக்கை படைக்கும் வழக்கம் 1891 முதல் சுமார் 130 ஆண்டுகளாக இன்று வரை தொடர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### மீண்டும் மாம்பழச் சங்கம்

அருள்திரு. ரேனியஸ் ஐயர் அவர்களை சி.எம்.எஸ் தாய் சங்கமும், சி.எம்.எஸ் சென்னை கமிட்டியும் பணிநீக்கம் செய்த பின்னர் இப்பண்டிகையை கொண்டாடும் வழக்கம் சுமார் 15 ஆண்டுகள் நின்றுபோனது. 1835 க்குப் பின்னர் 1849 இல் மாம்பழச் சங்கம் என்ற அடைமொழியுடன் இந்த பண்டிகையை அருள்திரு.ஜார்ஜ் பெற்றிட் ஐயரவர்கள் தொடங்கினார்கள். அருள்திரு.ரேனியஸ் ஐயரவர்கள் இப்பண்டிகையை ஆரம்பித்த நாள் 09.07.1834 புதன்கிழமை என்பதால் ஆண்டுதோறும் ஜூலை மாதம் இரண்டாவது வாரம் புதன்கிழமை மாம்பழச்சங்கம் நடைபெற்றது. தற்போதும் அதே நிலை கடைபிடிக்கப்படுகிறது. இந்த மாம்பழச்சங்கம் பண்டிகையை ஆனி மாதம் கடைசியில் ஜூலை 9 ஐ ஒட்டி வைப்பதற்கு காரணமாக அமைந்த ஒரு முக்கியமான திருவிழா குரங்கணி முத்துமாலை அம்மன் ஆனித் திருவிழாவாகும். 1820 முதல் ரேனியஸ் ஐயரவர்கள் குதிரைமூலம் தனி ஒருவராகவோ, உபதேசிமாரோடு இணைந்தோ நற்செய்தி அறிவித்ததன் பயனாக ஆண்டுதோறும் புதிய புதிய சபைகள் உருவாகிக் கொண்டே வந்தது.

### பண்டிகை தொடங்க காரணம்

அக்காலத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் குரங்கணி முத்துமாலை அம்மன் ஆனித் திருவிழா மிக பிரபலமான ஒன்றாக இருந்தது.



அந்த முத்துமாலை அம்மன் கோயில் திருவிழாவிற்கு அக்காலத்தில் பெருமளவில் கிறிஸ்தவர்களாக மதம் மாறி வந்த நாடார் சமூகத்தவர்கள். மாட்டு வண்டிகளில் கூட்டம்கூட்டமாக சென்று குரங்கணியில் உள்ள தாமிரபரணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கிற முத்துமாலை அம்மன் கோயிலை ஒட்டி இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்து ஆற்றங்கரையோரம் இருக்கிற மரநிழலில் இளைப்பாறி தாங்கள் கொண்டு சென்ற ஆட்டுக்கிடாக்களை அடித்து சமையல் செய்து பெரும் குடும்பமாக ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டு குரங்கணி முத்துமாலை அம்மனை வழிபட்டு திரும்பி வரும் வழியில் அனைவருக்கும் தெரியும்படி மீதமுள்ள ஆட்டுக்கடா இறைச்சித் துண்டுகளை உப்புக்கண்டம் போட்டு கொண்டு வருவது வழக்கம் ஆக இருந்தது. அக்காலத்தில் கிறிஸ்தவர்களாக மதம்மாறிய பின்பும் குரங்கணி முத்துமாலையம்மன் திருவிழாவுக்கு பெருமளவில் சபை மக்கள் சென்று வந்தார்கள். அப்பொழுது இதைக் கண்ட அருள்திரு.ரேனியஸ் திருமண்டல அளவில் பெரு விழா ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டார்கள். அக்காலத்தில் காலரா, கொள்ளை காய்ச்சல் போன்றவற்றால் அநேக பகுதிகளில் உபதேசிமார்கள் உபாத்தியாயர்கள் மரணமடைந்ததால் அவர்களது குடும்பங்கள் வறுமை நிலையை நோக்கி தள்ளப்பட்டது. அவர்களுக்காக நிதி சேகரிப்பதற்கெனவும் திருநெல்வேலி திருமண்டலம் முழுவதிலுமுள்ள சபை மக்களுக்கு பெரியதொரு விழா எடுப்பதன் மூலமாக குரங்கணி முத்துமாலை அம்மன் திருவிழாவிற்கு கிறிஸ்தவர்கள் ஆனபின்பும் சென்றுவந்த சபை மக்களுக்கு ஒரு மாற்று ஏற்பாடாக இருப்பதற்காகவும் பண்டிகைப் பெருவிழா ஒன்றை குரங்கணி முத்துமாலை அம்மன் திருவிழா நடைபெறுகிற அதேநாளில் 09.07.1834அன்றுபாளையங்கோட்டையில் நடத்த திட்டமிட்டார்கள். அதற்காக பாளையங்கோட்டையில் தற்போது நூற்றாண்டு மண்டபம் இருக்கிற பகுதியில் பெரிதான அலங்காரப் பந்தல் போடப்பட்டது. பண்டிகைக் குறித்த அறிவிப்பு திருநெல்வேலி திருமண்டலம் எங்கும் சபை மக்களுக்கு கூறப்பட்டது. சபை மக்கள் அனைவரும் மாட்டு வண்டிகளில் உற்சாகமாக குரங்கணி முத்துமாலை அம்மன் கோயில் திருவிழாவுக்கு செல்வது போல பாளையங்கோட்டையில் நடைபெற்ற திருமண்டலத்தின் பெருவிழாவான மாம்பழச்சங்க பண்டிகைத் திருவிழாவுக்கு சென்று வந்தார்கள். தொடங்கிய காலம் முதல் இன்றுவரை இப்பண்டிகை மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது.

## ஸ்தோத்திர பண்டிகையின் தொடக்கம்

திருநெல்வேலி திருமண்டலம் எஸ்.பி.ஜி மற்றும் சி.எம்.எஸ் ஆகிய இரு மிஷனரி சங்கங்களின் மூலம் உருவானது. முதன்முதலாக ஸ்தோத்திர பண்டிகை எஎஸ்.பி.ஜி மிஷனில் அக்காலத்தில் அதன் தலைமை இடமாக இருந்த நாசரேத்தில் 1884 இல் முதன்முதலாக தொடங்கப்பட்டது. ஆனால் தொடர்ச்சியாக ஆண்டுதோறும் இப்பண்டிகை அங்கு நடைபெறவில்லை. முதன்முதலாக சி.எம்.எஸ் மிஷனில் சிவகாசி சாட்சியாபுரம் சர்க்கிளில் தலைமை இடமாகிய சாட்சியாபுரத்தில் 1891 இல் சி.எம்.எஸ் தலைமை மிஷனரி மற்றும் திருநெல்வேலி மாவட்ட சர்ச் கவுன்சில் தலைவர் அருள்திரு.தாமஸ் வாக்கர் ஐயரவர்களால் தபச உற்சவம் என்னும் ஸ்தோத்திர பண்டிகை தொடங்கப்பட்டது. அந்த பண்டிகை இன்றளவும் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. மதுரை - இராமநாதபுரம் திருமண்டலத்தில் இப்பண்டிகை மிக முக்கியத்துவம் பெற்றதாக காணப்படுகிறது.

## பண்டிகை நாட்கள்

சாட்சியாபுரத்தில் முதன்முதலாக இப்பண்டிகை தொடங்கப்பட்ட காலத்தில் நான்கு நாட்கள் இப்பண்டிகை நடத்தப்பட்டது. இப்பண்டிகை மிக வெற்றிகரமாக நடைபெறுவதையும் சிவகாசி சாட்சியாபுரம் சர்க்கிள்களுக்கு உட்பட்ட அனைத்து சபை மக்களும் மிகுந்த உற்சாகத்தோடு பண்டிகையில் பங்கு பெறுவதையும் கண்ட திருநெல்வேலி திருமண்டலத்தில் பிற சர்க்கிள்களின் குருமார்கள் தங்களுடைய சர்க்கிள்களின் தலைமை இடத்தில் ஸ்தோத்திர பண்டிகை என்றும் அறுப்பின் பண்டிகை என்றும் சேர்ப்பின் பண்டிகை என்றும் அழைக்கப்பட்ட இப்பண்டிகையை தொடங்க ஆரம்பித்தார்கள். பிற்காலத்தில் கூட்டம் என திருநெல்வேலி திருமண்டல சபைமக்களால் இப்பண்டிகை அழைக்கப்பட்டது. தற்போது பெரும்பாலும் மூன்று நாட்கள் நடைபெறுகிறது.

## ஸ்தோத்திர பண்டிகை நடைபெறும் இடங்களும் அவை தொடங்கப்பட்ட ஆண்டுகளும்

1891 - சாட்சியாபுரம் (சிவகாசி)
1892 - நல்லூர்
1839 - மெய்ஞானபுரம்
1894 - டோனாவூர்
1894 - சுவிசேஷபுரம்
1895 - பாளையங்கோட்டை
1896 - பங்களா சுரண்டை
1896 - பண்ணைவிளை
1902 - இடையன்குளம்
1944 - குற்றாலம்
1945 - கடையம்
1966 - சீவலசமுத்திரம் (கண்டபட்டி)
1970 - கல்லிடை க்குறிச்சி

## ஸ்தோத்திர பண்டிகை தொடங்குவதற்கான காரணங்கள்

கிறிஸ்தவர் அல்லாத பிற மதத்தினர் குரங்கணி முத்துமாலை அம்மன் திருவிழா, திருநெல்வேலி நெல்லையப்பர் ஆனி திருவிழா, சங்கரன்கோவில் ஆடித்தபசு விழா, பாபநாசம்காரையார் சொரிமுத்துஅய்யனார் கோயில் ஆடிஅமாவாசை விழா, ஏரல் சேர்மன்சாமி ஆடி அமாவாசை விழா, திருச்செந்தூர் வைகாசி விசாகம், திருச்செந்தூர் கந்த சஷ்டி போன்ற திருவிழாக்களுக்கு பல கிராமங்களிலிருந்து பிற மதத்தினர் ஒன்றுகூடி மாட்டு வண்டிகளில் ஒன்றாக செல்வதும் குலதெய்வ கோயிலுக்கு பங்குனி உத்திரம் சிவராத்திரி போன்ற நாட்களில் குடும்ப சொக்காரர்கள் (பங்காளிகள்) ஒன்றாக இணைந்து விழாக் கொண்டாடி வருவதும் அந்த ஊர்களுக்கு திருவிழாக்காலங்களில் பிற மதத்தினர் ஒன்றாக செல்வதைக் கண்ட புதிய கிறிஸ்தவர்களும் தாங்களும் ஒன்றுகூடி அலங்காரப் பந்தலில் சபை குடும்பங்களாக சபை மக்களாக ஒருங்கிணைந்து ஆண்டவரை வழிபட வேண்டும் என்று விரும்பினார்கள். இவ்வாறான சபை மக்களின் விருப்பத்தை அந்தக்கால ஸீனிறீமிஷனரிமார் அன்புடன் ஏற்றுக் கொண்டார்கள் இதுவே ஸ்தோத்திர பண்டிகைகள் தொடங்குவதற்கு காரணமாயிருந்தது.

## பண்டிகை தொடங்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள்

ஸ்தோத்திர பண்டிகைகள் தொடங்கப்பட்டதன்



மூலம் குரங்கணி முத்துமாலை அம்மன் கோயில் ஆனிதிருவிழா, சங்கரன்கோவில் ஆடித்தபசுவிழா, திருநெல்வேலி நெல்லையப்பர் ஆனித்திருவிழா, பாபநாசம் காரையார் ஆடி அமாவாசை விழா, எரல்ஆடி அமாவாசைவிழா, தேரிகுடியிருப்பு, மேலபுதுக்குடி, உவரி போன்ற பல இடங்களில் குலதெய்வ கோயில் திருவிழாக்கள் போன்றவற்றுக்கு கிறிஸ்தவர்கள் ஆன பின்பும் பழைய பழக்கத்தை கைவிடாமல் சென்று வந்த கிறிஸ்தவர்கள் ஸ்தோத்திரபண்டிகைகள் தொடங்கப்பட்ட பின்பு அந்த இடங்களுக்குச் செல்லாமல் வண்டி கட்டி உற்சாகமாக ஸ்தோத்திர பண்டிகை நடைபெற்ற சர்க்கிள் தலைமை இடங்களுக்குச் சென்று வந்தார்கள். குறிப்பாக சுரண்டை வட்டாரத்தை சார்ந்தவர்கள் சுரண்டையில் நடைபெற்ற ஸ்தோத்திர பண்டிகைக்கும், நல்லூர் ஆலங்குளம் வட்டாரத்தை சார்ந்தவர்கள் நல்லூர் ஸ்தோத்திர பண்டிகைக்கும், டோனாவூர் வட்டாரத்தை சார்ந்தவர்கள் டோனாவூர் ஸ்தோத்திர பண்டிகைக்கும், இடையன்குளம் வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் இடையங்குளம் ஸ்தோத்திர பண்டிகைக்கும், தென்காசி வட்டாரத்தைச் சேர்ந்தவர்கள் குற்றாலம் ஸ்தோத்திரப் பண்டிகைகும் , கடையம் வட்டாரச் சபையார் கடையம் ஸ்தோத்திரப் பண்டிகைக்கும் உற்சாகத்தோடு மாட்டு வண்டிகளில் பயணித்து பண்டிகை நடைபெறும் இடங்களில் மூன்று நாட்கள் தங்கி அலங்கார பந்தலில் ஆண்டவரை வழிபட்டு திரும்பி வந்தார்கள். அதன் மூலமாக அவர்களுக்குள் ஒரு பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. தற்காலத்தில் மாட்டு வண்டிகளில் பயணம் செய்வது குறைந்துள்ளது. பேருந்து மூலமாக, வேன் மூலமாக, கார் மூலமாக, இருசக்கர வாகனங்கள் மூலமாக குடும்பம் குடும்பமாக ஸ்தோத்திர பண்டிகைகள் நடைபெறும் இடங்களுக்கு சென்று ஆண்டவருக்கு நன்றி காணிக்கை செலுத்தி இறைவழிபாடு செய்து வருகின்றனர்.

### பண்டிகைக்காக ஆயத்தங்கள்

இந்த பண்டிகைக்காக பல மாதங்களுக்கு முன்பாகவே சபை மக்கள் பணம் சேர்த்து வருவது, உண்டியல் மூலம் பணம் சேகரிப்பது எனப் பல காரியங்கள் இன்றளவும் தொடர்கிறது. ஸ்தோத்திர பண்டிகைகள் சபைகளுக்குள்ளும், சபை மக்களுக்குள்ளும் கிறிஸ்தவ ஐக்கியத்தை ஏற்படுத்தி இறைமக்களை ஒன்று கூட்டுகிறது. ஸ்தோத்திர பண்டிகை நிகழ்வுகள்

பொதுவாக ஸ்தோத்திர பண்டிகைகளில் முதலாம் நாள் ஆயத்த பவனி, ஆயத்த கொடியேற்றம், ஆயத்தஆராதனை போன்றவை நடைபெறுகின்றன. இரண்டாம், மூன்றாம் நாட்களில் திருவிருந்து ஆராதனை, வருடாந்திர கூட்டம், பண்டிகை ஆராதனை போன்றவையும்


விளையாட்டு போட்டிகள், மன்றாட்டு ஜெபம், சிறுவர்களுக்கு வாலிபர்களுக்கு ஆண்களுக்கு பெண்களுக்கு என தனித்தனியே சிறப்பு ஜெபக் கூட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் மூன்றாம் நாட்களின் இரவுகளில் பஜனை பிரசங்கம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. அனைத்து நிகழ்வுகளிலும் கொடுக்கப்படுகிற ஆண்டவருடைய அருட்செய்தி சபை மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையை ஆண்டவருடைய திருச்சமுகத்திற்கு நேராக கொண்டு செல்கிறது

### பண்டிகைக்கால கடைகள்


சிறுபிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும் வகையில் ராட்டினங்கள், மிட்டாய் கடைகள், வளையல் கடைகள், விளையாட்டு பொருட்களுக்கான கடைகள், குடும்பத்திற்கு தேவையான உணவு உபயோக பொருட்களுக்கான கடைகள், யூளகூஷளவிஜு செய்வதற்காக தேனீர் கடைகள்,வாய்க்கு ருசியான சிற்றுண்டி மற்றும் உணவு அளிக்கும் கடைகள் என பலதரப்பட்ட மக்களின் தேவைகளையும் நிறைவு செய்யும் வகையில் அமைக்கப்படுகின்ற கடைகள் என ஸ்தோத்திர பண்டிகைகள் அதை ஒட்டிய நிகழ்வுகள் திருச்சபை மக்கள் அனைவருக்கும் ஆண்டுதோறும் மகிழ்ச்சியை கொடுக்கக் கூடியதாக அமைகிறது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

**ஸ்தோத்திர பண்டிகைகள்**
**இறைமக்களை ஒன்று கூட்டுகிறது**
**இறைமக்களை ஆண்டவருக்கு நேராகக் கொண்டு செல்கிறது**
**இறை மக்களை மகிழ்ச்சிப் படுத்துகிறது**

> **விதவைகளின் ஆதரிப்புச் சங்கத்தை நிறுவி, அதன் மூலம் உபதேசியார்களின் விதவை மனைவிகளுக்கு ஜீவனாம்சம் கொடுத்து வர ஏற்பாடு செய்தவர். கனம் ரேனியஸ் ஐயர்**




# நம் ஜெபபுஸ்தகத்தை அறிந்து கொள்வோம்



● Rex

இந்த நவீன காலத்தில் பல புதிய புதிய நம்பிக்கைகளும், ஆராதனை முறைகளும் தோன்றிக்கொண்டு இருக்கிறது. ஒரு குருவானவர் பல நம்பிக்கை கொண்டவர்களை ஒன்றிணைக்க, பல முயற்சிக்களை இந்த காலத்தில் ஏறெடுக்க வேண்டியுள்ளது. பல சபைகளுக்கு செல்லும் குருவானவர்கள் விசுவாசம் சமந்தமான பல முடிவுகளை எடுக்க தன்னிச்சையாக முடியாது. இக்காலத்திலே இப்படி இருந்தது என்றால் பதினாறாம் நுற்றாண்டில் உள்ள நிலையை யோசித்து பாருங்கள்.பதினாறாம் நுற்றாண்டில் ஆங்கில சீர்திருத்த காலகட்டத்தில் சபைகளுக்கு உள்ளே மக்கள் பல விதமாய் விசுவாசத்தின் நிமித்தம் ஒருமனதாய் வாழ இயலாமல் போயிற்று. ஒரு சமுக மக்கள் தாங்கள் எப்படி ஜெபம் செய்கிறோம் என்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆனால் மற்றொரு பிரிவினரோ எப்படி நாம் கடவுளை நம்புகிறோம் என்பதிலே நம் ஜெபம் முக்கியத்துவம் பெறுகிறது என்ற கருத்தினை முன்வைத்ததால், சபைக்குள்ளே ஒருவரை ஒருவர் பயங்கராமாக தாக்கி கொண்டனர். அத்தகைய காலகட்டத்தில் வாழ்ந்த பேராயர்கள் பலர் எப்படி சபைக்குள் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டும் என்று பயங்கரமாக யோசித்து கொண்டிருந்தனர். ஆனால் அது அவ்வளவு எளிது அல்ல. ஆனாலும் அத்தகைய குழப்பத்திற்கு விடையாக தாமஸ் கார்னர் என்பவர் உதித்தார். இவர் தேவன் மீது கொண்டுள்ள பற்று காரணமாக பல வருடங்கள் ஆராய்ச்சி செய்து, வேதம், சபை மக்களின் நம்பிக்கை, ஆதி கிறித்தவ நம்பிக்கை போன்றவற்றை அடிப்படையாக கொண்டு


தாமஸ் கார்னர்

அனைத்து மக்களுக்கும் ஏற்ற வகையில் ஒரு ஜெபபுஸ்தகத்தை வடிவமைத்தார். அவரது ஜெப புஸ்தகமானது வேதாகமம், ஆதி திருச்சபை நம்பிக்கைகள் மற்றும் பல முக்கிய சித்தாந்தகளை அடிப்படையாக கொண்டதாக இருந்தது. இந்த ஜெப புஸ்தகம் வேத அடிப்படையிலான, அனைத்து மக்களுக்கும் ஒரு விசுவாச கேடயமாக, அவர்களின் சந்தேகம் தீர்க்கும் கருவியாக விளங்கியது. எனவே மக்கள் அனைவரும் தங்களின் வேறுபட்ட கருத்துக்களை கலைந்து ஒரே தேவனின் சகோதரத்துவமுள்ள சபையாக ஒன்றிணைந்தனர். காலங்கள் உருண்டோட உள்ளுக்குள்ளே பல புது புது விசுவாச கொள்கைகளை பிற சபையினர் திணிக்க முயன்றனர். ஆனாலும் அந்த இக்கட்டான பல சூழல்களிலும் இந்த ஜெப புஸ்தகமும், வேதமும் மக்களை பிரிய விடாமல் ஒன்றுபடுத்தி வந்தது. பல இந்திய சபைகளில் ஆங்கிலிக்கன் பாரம்பரியத்தை கொண்ட சபைகள் இந்த முறையை இன்றும் பின்பற்றுகின்றனர். திருநெல்வேலி திருமண்டலத்தில் நாம் கையில் வைத்திருக்கும் இந்த ஜெபபுஸ்தகமும் இதில் அடங்கும்.


கொர்மேனஸ்

இந்த ஜெபபுத்தகத்திற்கும் ஆதி கிறிஸ்தவத்திற்கும் தொடர்பு உள்ளதா? ஆம் என்பதே விடை. பல கள்ள உபதேசங்கள் உள்ளே நுழைந்தாலும் ஆதி கிறிஸ்தவத்தை கிறிஸ்துவின் விசுவாசத்தில் இருந்து பிரிக்காமல், அவர்களை வைராக்கியத்தோடு கிறிஸ்துவை பின்பற்ற உதவியதே இந்த ஜெப புஸ்தக முறைமை எனலாம். தாமஸ் கார்னர் உருவாக்கிய இந்த ஜெபபுஸ்தகம் வடிவமைப்பிலும், வழங்கப்பட்ட அமைப்பிலும் தான் வேறுபட்டதே தவிர அடிப்படை சித்தாந்தங்களில் அல்ல. நாம் இந்த தொடரில் இந்த அடிப்படை சித்தாந்தங்கள் என்னவென்பதையும், ஜெபப்புத்தகத்தின் வரலாற்றையும் காணலாம்.

## ஜெப புஸ்தகத்தின் ஆதி வரலாறு

இரண்டாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் சின்ன ஆசியாவில் உள்ள எபேசு சபையில் இருந்து பிரெஞ்ச் தேசத்திற்கு வந்த மிசனரிகள் அங்கு வாழ்ந்த மக்கள் அப்போஸ்தலர் காலத்தில் வழங்கி வந்த ஜெபமுறைகளை இங்கிலாந்து சபையிலும் முறைபடுத்தி வந்தனர். காலை மாலை ஜெபமுறைகளை பற்றி அதிகம் வரலாறு கிடைக்கவில்லை.ஆனால் காலிக்கன், பிரேஞ்சு ஜெபமுறைகள், கொர்மேனஸ், லூபஸ் என்பர்களால் கிபி ஆண்டில் இங்கிலாந்தில் பிரபலாமாயிருந்தன.

காலிக்கன் ஜெபமுறை


இங்கிலாந்தில் வழங்கப்பட்ட காலிக்கன் ஜெப முறையில் உள்ளவை

1. பழைய ஏற்பாட்டில் ஒருபாடம்
2. நிருபங்களில் ஒரு பாடம்
3. பெனிடிசிற்றி என்ற கீர்த்தனை
4. சவிசேஷவாக்கியம்
5. பிரசங்கம்
6. ஜனங்களுக்காக ஜெபங்கள்
7. ஞானஸ்நானத்துக்கு ஆயத்தககாரரை அனுப்பி விடுதல்
8. அந்த நாளுக்குரிய புத்திமதிகள்
9. கீதத்தோடு காணிக்கை வாங்குதல்

10. அப்பம் ரசம் படைக்கப்பட்டு மூடப்படுதல்
11. பரிசுத்தவான்களின் பேர் வாசிக்கப்படுதல்
12. சமாதான முத்தம்
13. சுருக்கஜெபங்கள்
14. உங்கள் இருதயங்களை உயாத்துங்கள் என்பவைகள்
15. திரித்துவ கீத முகவுரை தோத்திரம்
16. பரி.நற்கருணைப் பிரதிஷ்டை
17. பரிசுத்தாவிக்காக ஜெபம்
18. அப்பத்தை பிட்குதல்
19. கர்த்தருடைய ஜெபம்
20. ஜனங்களை ஆசீர்வதித்தல்
21. கீதத்தோடு பரி.நற்கருணையைப் பரிமாறுதல் ஸ்தோத்திரஞ்செலுத்தல்

ஆதி கிறிஸ்தவ ஜெபமுறைகள் இன்றளவும் நாம் ஆசரித்து வருவது நமக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளிக்கிறது. இந்த ஜெபமுறைகள் எந்த வகையில் அவசியம்? எதற்க்காக நாம் இதை பின்பற்ற வேண்டும்? ஆதி கிறிஸ்தவ விசுவாசத்தின் உண்மைதன்மை என்ன ? என்ற கேள்விகளுக்கு இந்த தொடர் பதிலாய் அடுத்த இதழில்

தொடரும் ...




## எண்ணிக்கைக்கு அல்ல, தரத்திற்கே முக்கியத்துவம்

**“ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்கள்”**

அக்காலத்தில் வருடா வருடம் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையைத் தருகின்ற பட்டியல்களில் ஞானஸ்நானம் பெறாத கிறிஸ்தவர்கள் அல்லது ஆயத்தக்காரர்கள் என்று ஒரு வகையினரின், எண்ணிக்கை தரப்படுகின்றது! அதாவது, நான் கிறிஸ்தவனாக விரும்புகிறேன், என்று ஒருவர் சொன்னால் அவருடைய நோக்கம் தகுந்தது எனக் கண்டறிந்த பின்னர், வேதத்திலும் நல்ல கிறிஸ்தவ வாழ்க்கையிலும் அவர் பயிற்றுவிக்கப்பட்டார். அதன் பின்பு தான் அவருக்குத் திருமுழுக்கு கொடுக்கப்பட்டது என்பது தெளிவு. கால்ட்வெலும் மற்ற கிறிஸ்தவ மிஷனெரிகளும் கிறிஸ்தவரின் எண்ணிக்கைக்கு அல்ல, தரத்திற்கே முக்கியத்துவம் தந்தனர் என்பது புலப்படுகிறது.

# திருநெல்வேலி திருமண்டலம் இருநூற்றாண்டு விழா

## ஓர் பார்வை

**J.J.G**



விழாக்கள் நடத்துவதில் அனுபவமிக்கவரும் ஆர்வமிக்கவருமான திருநெல்வேலி பேராயர் மகாகனம்.சா. தானியேல் ஆபிரகாம் ஐயா அவர்களது காலத்தில் திருநெல்வேலி திருமண்டல இருநூற்றாண்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இருநூற்றாண்டு விழா தொடக்கம்

19. 01. 1980 சனிக்கிழமை இரு நூற்றாண்டு தொடக்கவிழா 19.01.1980 அன்று காலையில் பாளையங்கோட்டை தூய.திரித்துவ பேராலயத்தில் திருவிருந்து ஆராதனையுடன் தொடங்கிய, இதில் நூற்றுக்கும் மேற்பட்ட குருமார்கள் பங்கேற்றார்கள் திருமண்டல மக்கள் பெருந்திரளாக பங்கேற்றார்கள். கிருஷ்ணா - கோதாவரி பேராயர் அருட்பெருந்திரு. ஆனந்தராவ் சாமுவேல் அவர்கள் சிறப்பு செய்தி அளித்தார்கள் திருமண்டலத்தின் மூத்த குருவானவர் கனோன். S.பால்மாணிக்கம்ஐயரவர்கள் 200ஆண்டு விழாவிற்கான கொடியை ஏற்றினார்கள் பின்பு மாபெரும் பவனி தூய. திரித்துவ பேராலயத்தில் இருந்து நூற்றாண்டு மண்டபம் வரை சென்றது அங்கு விழாவின் ஒருங்கிணைப்பாளர் கனம்.திரவியம் இயேசுதாசன் ஐயரவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள் திருமண்டல் உதவி தலைவர் Rev.சவரிதாஸ் ஐய்யரவர்கள் சிறப்பு ஜெபம் செய்தார்கள் திருநெல்வேலி பேராயர். கனம். S.தானியேல்ஆபிரகாம் அவர்கள் 200 ஆண்டு விழா குறித்து அறிமுகம் செய்து வைத்து பேசினார்கள் நூற்றாண்டு மண்டபத்தில் நடந்த நிகழ்வில் சிறப்பு சொற்பொழிவாளர் ஆக இந்திய தேசிய சபை மன்ற தலைவர் திருமதி.D.L.கோபால் ரத்தினம் அவர்கள் உரையாற்றினார்கள்.

லே செயலாளர் திரு.D.G. ஜெய்சிங் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்கள் நெல்லை பேராயர் மகாகனம் S.தானியேல்ஆபிரகாம் அவர்கள் ஜெபித்து இறை ஆசி கூறினார்கள் மாலை 6 மணி அளவில் நூற்றாண்டு மண்டபத்தில் திருமண்டல பள்ளிகளின் மாணவ மாணவியரின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

திருநெல்வேலி இருநூற்றாண்டு விழாவின் இரண்டாம்கட்ட விழா குளோரிந்தா அம்மையார் விழா

இவ்விழா 21,22,23. 02.1980 நாட்களில் நடைபெற்றது. 21,22 ஆகிய நாட்களில் இரவு புலவர் வில்சன் தனராஜ் ஆசிரியர் அவர்களின் இன்னிசை பஜனை நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. 23. 02.1980 அன்று சனிக்கிழமை சிறப்பு திருவிருந்து ஆராதனை மிலிட்டரி லைன் கிறிஸ்து தேவாலயத்தில் நடைபெற்றது. நெல்லை பேராயர்.மகாகனம்.சா.தானியேல் ஆபிரகாம் அவர்கள் சிறப்பு செய்தி அளித்தார்கள் திருவிருந்து ஆராதனை முடிந்தவுடன் மிலிட்டரி லைன் கிறிஸ்து தேவாலயத்தில் இருந்து பவனியாக அனைவரும் புறப்பட்டு குளோரிந்தா தேவாலயத்திற்கு வந்தனர். குளோரிந்தா அம்மையார் விழாவிற்காக அங்கு கொடியேற்ற வைபவம் நடைபெற்றது அன்று மாலையில் 5 மணி அளவில் அரசரடி இறையியல் கல்லூரி முதல்வர் பேராசிரியர் அருள்திரு டாக்டர் ஞான ராபின்சன் அவர்கள் குளோரிந்தா தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் அருளுரையாற்றினார்கள் அன்று மாலையில் அதே தேவாலயத்தில் திருவிருந்து ஆராதனை நடைபெற்றது. அன்றைய தினம் மாலை ஏழு முப்பது மணி அளவில் தூய யோவான் கல்லூரி திறந்தவெளி அரங்கில் பேராயர் அவர்களின் தலைமையில்பொதுக்கூட்டம்நடைபெற்றது பொதுக் கூட்டத்திற்கு பின்பு இரவு 8 மணி அளவில் குளோரிந்தா அம்மையாரின் வரலாற்று நாடகம் நடைபெற்றது நாடகத்திற்கு பின்பு மூத்த குருவானவர் Rev.கிருபை மணி ஐயரவர்கள் நன்றி கூற குளோரிந்தா அம்மையார் விழா சிறப்பாக நடந்து முடிந்தது.

ஆண்கள் ஐக்கிய சங்க தொடக்க விழா

இருநூற்றாண்டு விழாவின் சிறப்பு அம்சமாக திருநெல்வேலி திருமண்டலத்தில் ஆண்கள் ஐக்கிய சங்கம் இல்லாத நிலையில் திருநெல்வேலி திருமண்டலத்தில் பெண்கள் ஐக்கிய சங்கம் சிறப்பாக நடை பெற்று வந்த நிலையில் ஆண்கள் ஐக்கிய சங்கம் இல்லாமல் இருப்பதை கண்ட பேராயர் ஐயா அவர்கள் ஆண்கள் ஐக்கிய சங்கத்தை தொடங்கினார்கள். 17. 05. 1980 அன்று ஆண்கள் ஐக்கிய சங்கம் முறைப்படி திருநெல்வேலி திருமண்டலத்தில் தொடங்கப்பட்டது. சங்க தொடக்கத்திற்கான

திருவிருந்து ஆராதனை பாளையங்கோட்டை சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் போடப்பட்ட கன்வென்ஷன் பந்தலில் சிறப்பாக நடைபெற்றது கன்வென்ஷன் செய்தியாளராக தியோடர் வில்லியம்ஸ் அவர்கள் ஆண்டவருடைய அருட்செய்தியை கொடுத்தார்கள். ஆண்கள் ஐக்கிய சங்கம் தொடங்கப்பட்டதன் நிகழ்வாக விழா கொடி ஏற்றப்பட்டது. சங்கத்தொடக்க விழா 27.05.1980 அன்று காலை 11 மணி அளவில் சாராள் தக்கர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்ட அலங்கார பந்தலில் நெல்லை பேராயர் மகாகனம்.சா.தானியேல் ஆபிரகாம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது ஆண்கள் ஐக்கிய சங்கத்திற்காக டைக்கும்படியாக உண்டியல் பெட்டிகள் வழங்கப்பட்டன பல்வேறு நிறுவனங்களின் சார்பாக ஆண்கள் ஐக்கிய சங்கம் தொடங்கியதற்கு வாழ்த்துக்கள் கூறப்பட்டது. அன்று மதியம் இரண்டு முப்பது மணி அளவில் நெல்லை பேராயர் மகாகனம் சா. தானியேல் ஆபிரகாம் அவர்கள் தலைமையில் ஆண்கள் ஐக்கிய சங்கத்தின் முதல் அலுவல் கூட்டம் 2.30 மணி அளவில் சிறப்பாக நடைபெற்றது.

திருநெல்வேலி திருமண்டலம்

இருநூற்றாண்டு நிறைவு விழா

1980 ஜூலை மாதம் இந்த விழா நடைபெற்றது இந்த விழாவில் தலைமை விருந்தினராக முன்னாள் பேராயர்.மகாகனம்.ஸ்டீபன் நீல் அவர்கள் கலந்துகொண்டு கடந்த காலங்களை நினைவு படுத்தி மிக அருமையாக அருளுரையாற்றினார்கள்.

1. இரு நூற்றாண்டு விழா நிறைவு விழாவை ஒட்டி 500 பருவம் கடந்த பெரியவர்களுக்கு பாளையங்கோட்டை தாமிரபரணி ஆற்றங்கரையில் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது.

2. இரு நூற்றாண்டுநிறைவு விழா நினைவாக இரு நூற்றாண்டு கீதங்கள் எனும் கீதங்களும் கீர்த்தனைகளும் பாடல் புத்தகம் வெளியிடப்பட்டது

3. இருநூற்றாண்டு விழா நிறைவு சிறப்பு அம்சமாக திருநெல்வேலி திருமண்டல சபைகள் வட நெல்லைப் பகுதியில் சபைகளை தத்தெடுத்து அங்கு தேவாலயம் கட்டுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அது சிறப்பாக செயலாக்கப்பட்டது.

4. இரு நூற்றாண்டு விழா நினைவாக ஆண்டுதோறும் செவ்வாய் மற்றும் புதன் நாட்களில் ஆயத்த ஆராதனை மற்றும் மாம்பழச் சங்க பண்டிகை என இரண்டு நாள் நடைபெற்று வந்த பண்டிகை செவ்வாய், புதன், வியாழன் என மூன்று நாள் பண்டிகையாக மாற்றப்பட்டது.

மூன்றாவது நாள் பண்டிகை வியாழனன்று திருமண்டல ஸ்தோத்திர பண்டிகையாக அனுசரிக்கப்பட்டது அன்றைய தினத்தில் திருமண்டல பேராலயம் ஆன தூய திரித்துவ பேராலயத்தில் காலையில் ஸ்தோத்திர திருவிருந்து ஆராதனை நடைபெற்றது திருமண்டலம் முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களுக்கு அன்றைய தினம் சிறப்பு விடுமுறை அளிக்கப்பட் டது இந்த நிகழ்வுகள் இன்றளவும் தொடர்ந்து சரியாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.



# திருநெல்வேலியின் பாலர் மனமகிழ்ச்சி பண்டிகை தொடங்கிய வரலாறு

● ஆசிரியர்

திருநெல்வேலி திருமண்டலம் மற்றும் தூத்துக்குடி-நாசரேத் திருமண்டல ஆகியவற்றில் நடைபெறும் முக்கியமான விழாக்களில் ஒன்று பாலர் மனமகிழ்ச்சி பண்டிகையாகும். பாலர் மனமகிழ்ச்சி பண்டிகை தொடங்குவதற்கு மூல காரணமாக இருந்தவர் திரு.பா. சாமுவேல் பாக்கியநாதன் அவர்கள் ஆவார் இவர் பிற்காலத்தில் குருவானவராக அருட்பொழிவு பெற்றார் இந்திய மிஷனரி சங்கத்தின் தொடக்ககால நிறுவனர்களில் இவரும் ஒருவர். இந்திய மிஷனரி சங்கத்தின் முதல் மிஷனரியாக தோர்ணக்கல் பணி தளத்திற்கு சென்றவர் இவரே. அந்த மிஷனரி சங்கத்தின் காரியதரிசி ஆகவும் இவர் பணியாற்றியுள்ளார்.

பாலர் மனமகிழ்ச்சி பண்டிகை 1892 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது பாலர் மனமகிழ்ச்சி பண்டிகையில் காலை முதல் இரவு வரை சிறுபிள்ளைகளுக்கு கூட்டங்கள் நடத்தப்பட்டன மதிய உணவு மிகச்சிறப்பாக சிறுபிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுப்பதற்காக காணிக்கை சேகரிக்கப்பட்டது. பாலர் மனமகிழ்ச்சி பண்டிகை அன்று மதியம் 12 மணியளவில் பண்டிகை ஆராதனை நடைபெற்றது சிறு பிள்ளைகள் வரிசையாக நின்று முன்னே சென்று காணிக்கை தட்டுடன் நின்று கொண்டிருக்கும் குருவானவர் அவர்களது கரங்களில் உள்ள காணிக்கைத் தட்டில் பணமாக, பொருளாக காணிக்கை படைத்து ஆசீர்வாதம் பெற்றனர். பண்டிகை ஆராதனை நிறைவு பெற்றவுடன் பொருள் காணிக்கை ஏலம் விடப்பட்டது. இந்த முறையே பிற்காலத்தில் ஸ்தோத்திர பண்டிகை நாட்களில் பண்டிகை ஆராதனையில் தட்டு காணிக்கை படைத்தல், பண்டிகை ஆராதனை முடிந்தவுடன் ஏலம் விடுதல் ஆகியவற்றில் கடைப்பிடிக்கப்பட்டது.

**சபை மிஷனெரி சங்கம்**
**(Church Missionary Society)**

சி.எம்.ஸ் 1799 உலகின் அதிகமான பகுதிகளுக்கும், இந்தியாவுக்கும் வந்த மிஷெனரிகளில் அதிகமானவர்கள் சி.எம்.ஸ் மிஷெனரிகளே! கனம் ரேனியஸ், ஜான் தாமஸ், ஷாப்டர், பேரன் புருக் மற்றும் நெல்லை பகுதிக்கு 35 க்கும் மேலானவர்கள் வந்துள்ளார்கள். பாளையங்கோட்டை உலகிலேயே பெரிய சி.எம்.ஸ் மையமாக திகழ்ந்தது.

# வரலாற்று செய்திகள்



கடந்த ஜூன் மாதம் நமது திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கம் சார்பில் திருநெல்வேலி அப்போஸ்தலனின் கனம் CTE ரேனியஸ் 182வது நினைவு ஆண்டு தினத்தில் அவர்களது தியாகத்தை நினைவுபடுத்தும் விதமாக அவர் விதைக்கப்பட்ட இடத்தில் திருநெல்வேலி வரலாற்று சங்கத்தின் சார்பாக மன்னா செல்வகுமார் மற்றும் சுஜீத் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



மிஷனெரி இயக்கங்களின் தந்தை வில்லியம் கேரி அவர்களின் 186 வது நினைவு ஆண்டில் நம்முடைய திருநெல்வேலி கிறிஸ்தவ வரலாற்று சங்கத்தின் சார்பில் நம்முடைய சங்க உறுப்பினர்கள் கல்கத்தா செராம்பூர் இறையியல் கல்லூரி அருகில் உள்ள அவருடைய நினைவிடத்தில் இன்று காலை மலர் வளையம் வைத்து அவர் செய்த பணிகளை நினைவு கூர்ந்த பொழுது.

**மேலும் செய்திகளுக்கு எங்கள் இணையதளத்தை காணவும்**

TCHSPortal.co.in


## கிறிஸ்தவ ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு நற்செய்தி

காலவோட்டத்தில் அறுபட்டுக்கிடந்த இசைத் தமிழ் கண்ணிகளைத் தற்கால இசைத் தமிழ் உலகுக்குக் கோத்துக் கொடுத்த மாபெரும் இசைத் தமிழ் அறிஞர் தஞ்சை ஆபிரகாம் பண்டிதர். அவரின் பெயர் தாங்கிய நினைவு மின்னனு ஆராய்ச்சி நூலகம்

ஆபிரகாம் பண்டிதர் நினைவு ஆராய்ச்சி நூலகமானது தமிழ் கிறிஸ்தவ மின்னனு நூலகத்தில் முதல் நூலகம் இந்த நூலகமானது தமிழ் கிறிஸ்தவ வரலாற்று ஆய்வாளர்களுக்கும்,எழுத்தாளர்களுக்கும், தமிழ் கிறிஸ்தவ ஆராய்ச்சி மாணவர்களுக்கும் பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாகவும் அமையும் மற்றும் அநேக புதிய தமிழ் கிறிஸ்தவ எழுத்தாளர்களை உருவாக்கவும், ஆராய்ச்சியாளர்களை உருவாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் கிறிஸ்தவத்தின் முதல் மின்னனு நூலகத்தில் அரும் பெரும் பொக்கிஷங்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. மிஷனரிகள் எழுதிய புத்தகங்கள்,பழைமையான திருச்சபை சார்ந்த வரலாற்று ஆவணங்கள்,தமிழ் கிறிஸ்தவ கவிஞர்களின் வரலாறுகள், கிறிஸ்தவ காப்பியங்கள் அனைத்தும் வரிசைப்படியாக கொடுக்கப்பட்டுள்ளது.

library.tchsportal.co.in




Facebook @christianhistorical

தமிழ் கிறிஸ்தவத்தின் பொக்கிஷங்களை தேடி அலைய வேண்டாம் என்ற நோக்கத்தில் கையடக்கமாகவும் கையில் அடங்கும் நோக்கத்திலும் எந்நேரமும் எந்த வேளையிலும் எளிதாக தமிழ் கிறிஸ்தவ எதிர்கால திட்டத்தில் அனைத்து வடிவங்களிலும் நமது ஆராய்ச்சி நூலகத்தை நீங்கள் பயன்படுத்தலாம்.

தமிழ் புத்தக வரலாற்றில் இல்லாததை தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் லாப நோக்கம் இல்லாமல் ஆயிரக்கணக்கான புத்தகங்களையும் ஆய்வு நூல்களையும், வரலாற்று பொக்கிஷங்களையும் சுமந்து கொண்டு தமிழ் கிறிஸ்தவ வரலாற்றில் அடுத்த மைல் கல்லை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இறையியல் மாணவர்களுக்காகவும், எழுத்தாளர்களுக்காகவும் மாத கணக்கிலும் ஆண்டு கணக்கிலும் தொடர்ந்து சேவையை கொடுக்கவும் வரலாற்று சங்கம் திட்டத்தை கொண்டு வந்துள்ளது.

Tirunelveli Diocese - Department of Communication

# Crown Tv

TOOL BOX

Channel No : 165

இது ஒரு திருநெல்வேலி திருமண்டல தொலைக்காட்சி

கிறிஸ்தவ பாடல்கள் | தேவ செய்திகள் | குட்டீஸ் நேரம்

ஆராதனை வேளை | வாழ்த்துக்கள் | குறும்படங்கள்

வாலிபர் நேரம் | ஆலோசனை நேரம் | வேத ஆராய்ச்சி

**உங்கள் திறமைகளை உலகறிய செய்ய ஓர் அரிய வாய்ப்பு**

உங்கள் தேவ செய்திகள், பாடல்கள், சபை ஆராதனைகள், பண்டிகைகள்,
நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்து ஒளிபரப்ப எங்களை தொடர்பு கொள்ளுங்கள்

*Advertisement Price List*

Spot Ad - Rs.1800/month | Program Sponser - Rs.2000/month | Daily 30mins Program - Rs.3000/month | Gospel Songs - Rs.1000/month

Crown Tv 2/1, நூற்றாண்டு மண்டப வளாகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 002 போன் - 0462 - 258 22 55

communetdta@gmail.com | www.crowntv.in | 75 98 37 35 39 | www.facebook.com/tdtacrowntv | www.youtube.com/crowntvtdta

**பிரதிஷ்டை பண்டிகை சிறக்க வாழ்த்துகிறோம்**

Tirunelveli Diocese - Department of Communication

# ரேனியஸ் அகாடமி

வாழ்வை வளப்படுத்த வழிகாட்டுகிறோம்



இடம்: **STC Teacher Training Institute,**
**பாளை பேருந்து நிலையம்**

- IAS-Mains தேர்ச்சி பெற்றவர்களால் நடத்தப்படுகிறது
- சிறந்த Course Materials இலவசமாக தரப்படுகிறது
- ஒவ்வொரு வகுப்பு முடிந்தவுடன் தேர்வு நடத்தப்படும்

**பயிற்சி கட்டணம்**
மாதம்
**₹500**
மட்டும்



**UPSC - IAS**
Civil Services Examination

**RRB / SSC / BANK / TNPSC**
Group I,II,IIA,IV,VAO

**Online Classes Available**

**75 98 37 35 39**

# TDTA DIOCESAN BOOK DEPOT

**12, Trivandrum Road, Palayamkottai, Tirunelveli - 627 002.**

வேதாகமம்,
பாடல் புத்தகங்கள்
Mp3 DVD



ஆலய உபயோகப்
பொருட்கள்













இசைக் கருவிகள்

Trophies
விளையாட்டுப் பொருட்கள்

**0462-2502964, 2502564, 9488682964**

www.tdtadiocesanbookdepot.com